# பள்ளிக் கல்வித்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

மானியக் கோரிக்கை எண். 43. பள்ளிக் கல்வி

2010-2011

**தங்கம் தென்னரசு**
பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2010

## பொருளடக்கம்


1 கொள்கை

2 நிதி ஒதுக்கீடு

3 2010-2011ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டங்கள்

4 அரசின் சாதனைகள்

5 கொள்கை மற்றும் திட்டங்கள்

1. தொடக்கக் கல்வி
2. இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி
3. மெட்ரிகுலேஷன் பள்ளிகள்
4. ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி
5. பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி
6. அரசுத் தேர்வுகள்
7. ஆசிரியர் தேர்வு வாரியம்
8. தமிழ்நாடு பாடநூல் நிறுவனம்
9. பொது நூலகங்கள்
10. மாற்றுத்திறனாளிகள் நலன்

## பள்ளிக்கல்வித்துறை

### கொள்கை

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

-அய்யன் திருவள்ளுவர்

தமக்கு இன்பம் தருகின்ற கல்வியறிவு உலகத்தாருக்கும்
இன்பம் தருவதைக் கண்டு, அறிஞர்கள் மேலும் மேலும்
பலவற்றைக் கற்றிட விரும்புவார்கள்.

-திருக்குறள் கலைஞர் உரை

நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் தமிழகம் பள்ளிக் கல்வி வளர்ச்சியில் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. பள்ளிக் கல்வித் துறை கீழ்க்காணும் கொள்கைகளை வகுத்துச் செயலாற்றி வருகிறது.

- அனைவருக்கும் தரமான கல்வியை வழங்குதல்
- பள்ளி வயது குழந்தைகள் அனைவரையும் பள்ளிகளில் சேர்த்தல்
- பள்ளிகளில் சேர்ந்த அனைவரையும் 8ம் வகுப்பு முடிக்கும் வரை தொடர்ந்து பயிலச் செய்தல்
- இடைநிற்றல் என்ற நிலையே இல்லாமல் செய்தல்.
- அனைவருக்கும் இடைநிலைக் கல்வி என்ற இலக்கை அடையும் வகையில் ஆரம்பக் கல்வி பெற்ற அனைவரும் இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி பெற வழிவகை செய்தல்.
- உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் தங்கள் கல்வியை நிறைவு செய்ய உதவுதல்.
- பயிற்சிகளின் மூலம் ஆசிரியர்களிடம் படைப்பாற்றல், பங்கேற்றல், தொழில் நுட்பம் போன்ற திறன்களை வளர்த்து, தரமான தொடக்கக் கல்வி அளித்தல்.
- முழு எழுத்தறிவுத் திட்டத்தை அடைதல்
- ஆசிரியர்களின் கற்பிப்புத் திறனை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுதல்
- எழுத்தறிவில் நிலவும் பாலியல் வேற்றுமையை குறைக்கும் நோக்கத்தோடு மகளிர் சிறப்பு எழுத்தறிவுத் திட்டத்தினை செயற்படுத்துதல்.
- பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்
- பாடத்திட்டத்தின் தரத்தை உயர்த்துதல்
- பள்ளிகளில் உடல் நலக் கல்வியை ஊக்கப்படுத்துதல்
- பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் கணினிக் கல்வி அளித்தல்
- அனைவருக்கும் சமச்சீர் கல்வி வழங்குவது

இக்கொள்கைகளின் அடிப்படையில் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் இயக்குநரகங்களின் செயற்பாடும், அவற்றின் கொள்கைகளும், திட்டங்களும் அமைந்துள்ளன. இத்தொலைநோக்குக் கொள்கையைச் செயல்படுத்த முக்கியப் பொறுப்பு வகிக்கும் தொடக்கக் கல்வி இயக்குநரகம், அனைவருக்கும் கல்விக்கான மாநிலத் திட்ட இயக்ககம், பள்ளிக் கல்வி

இயக்குநரகம், மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரகம், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநரகம் ஆகியவையும் அவற்றுக்கு உறுதுணையாகச் செயல்படும் அரசுத் தேர்வுகள் இயக்குநரகம், ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரகம், ஆசிரியர் தேர்வு வாரியம், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் மற்றும் பொது நூலக இயக்குநரகம் ஆகியவையும் கல்வியறிவில் தமிழகத்தை உன்னத நிலைக்கு உயர்த்திடப் பாடுபடுகின்றன.

**நிதி ஒதுக்கீடு**

மானியக் கோரிக்கை எண்.43. பள்ளிக் கல்வி என்ற தலைப்பில் 2010-2011 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.10147.56 கோடியாகும். இதில் திட்டப் பணிகளுக்கு மட்டும் ரூ.1249.11 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

| 2010-2011 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| | **கணக்குத் தலைப்பு** | | **திட்டப் பணிகள்** | **திட்டத்தில் சேராதது** | **மொத்தம்** |
| ***வருவாய் பகுதி*** | | | | | |
| 2059 | பொதுப் பணிகள் | | **0.00** | **3666.50** | **3666.50** |
| 2202 | பொதுக் கல்வி | | | | |
| | 01 | தொடக்கக் கல்வி | 66919.98 | 415196.45 | 482116.43 |
| | 02 | இடைநிலைக் கல்வி | 28238.28 | 465365.16 | 493603.44 |
| | 04 | வயது வந்தோர் கல்வி | 348.30 | 119.64 | 467.94 |
| | 05 | மொழி வளர்ச்சி | 2.53 | 753.19 | 755.72 |
| | மொத்தம் - பொதுக் கல்வி | | **95509.09** | **881434.44** | **976943.53** |
| 2204 | போட்டி விளையாட்டுகளும், இளைஞர் நலப்பணிகளும் | | 331.04 | 156.34 | 487.38 |
| 2205 | கலையும், பண்பாடும் | | 50.00 | 3401.06 | 3451.06 |
| 2225 | ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் | | 3698.12 | 44.45 | 3742.57 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும், நலனும் | | 0.00 | 605.11 | 605.11 |
| 2251 | தலைமைச்செயலகம் - சமூகப் பணிகள் | | 0.00 | 459.36 | 459.36 |
| | நிகர மொத்தம் வருவாய்ப் பகுதி | | ***99588.25*** | ***889767.26*** | ***989355.51*** |
| ***மூலதனச் செலவு பகுதி*** | | | | | |
| 4202 | மூலதனச் செலவு | | 25322.28 | 0.00 | 25322.28 |
| | மொத்தம் மூலதனச் செலவு பகுதி | | ***25322.28*** | ***0.00*** | ***25322.28*** |
| ***கடன்கள் பகுதி*** | | | | | |
| 7610 | அரசுப் பணியாளர் முதலியோருக்குக் கடன்கள் | | 0.00 | 5.00 | 5.00 |
| 7615 | பல்வகைக் கடன்கள் | | 0.00 | 0.50 | 0.50 |
| | மொத்தம் கடன்கள் பகுதி | | ***0.00*** | ***5.50*** | ***5.50*** |
| | கூட்டுக — திருப்பி வசூலிப்பவை (வருவாய் இனத்தின் கீழ்) | | 0.00 | 0.00 | 73.20 |
| | **மான்யக் கோரிக்கை எண்.43ன் நிகர மொத்தம்** | | **124910.53** | **889772.76** | **1014756.49** |

## 2010-2011ல் பகுதி II புதிய திட்டங்கள்

| தொடர் எண் | திட்டப்பணிகளின் விபரம் | ஒதுக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| தலைமைச் செயலகம் - பள்ளிக்கல்வித் துறை | | |
| 1. | தலைமைச் செயலக பள்ளிக்கல்வித்துறையை கணினிமயமாக்கல் | 7.00 |
| தொடக்கக் கல்வி | | |
| 2. | தொடக்கக் கல்வி இயக்ககத்திற்கு SIEMAT கட்டடத்தில் கூடுதலாக இரண்டாவது தளத்தில் கட்டடம் கட்டுதல் | 92.00 |
| 3. | 5 உதவி தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கு கட்டடம் கட்டுதல் | 80.00 |
| 4. | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு 5 பயனற்ற ஈப்புகளை நீக்கி, 5 புதிய ஈப்புகள் வாங்குதல் | 30.00 |
| 5. | 30 மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கு நிகரி வாங்குதல் | 4.50 |
| 6. | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கு அலமாரி மற்றும் தளவாட சாமான்கள் வாங்குதல் | 7.00 |
| 7. | தொடக்கக் கல்வி இயக்ககத்திற்கு டாட் மெட்ரிக்ஸ் விரைவு அச்சுப்பொறி வாங்குதல் | 3.00 |
| 8. | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலக பணியாளர்களுக்கு கணினிபயிற்சி அளித்தல் | 0.75 |
| பள்ளிக்கல்வி | | |
| 9. | 100 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் சாதனங்கள் வழங்குதல் | 40.00 |
| 10. | 100 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூட சாதனங்கள் வழங்குதல் | 100.00 |
| 11. | 50 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 50 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணித ஆய்வுக்கூடம் அமைத்துக் கொடுத்தல் | 100.00 |
| 12. | 100 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 100 மேல்நிலைப் பள்ளிகளில் நூலக வசதியை மேம்படுத்துதல் | 40.00 |
| 13. | திருவள்ளூர் மாவட்டத்தில் முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு புதிய அலுவலகக் கட்டடம் கட்டுதல் | 72.00 |
| 14. | 500 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினி உதவியுடன் மொழி ஆய்வுக் கூடங்கள் அமைத்தல் | 64.00 |
| அரசுத் தேர்வுகள் | | |
| 15. | மதிப்பெண் அட்டவணை பதிவேடுகளை டிஜிட்டல் முறையில் பராமரித்தல் | 20.00 |
| 16. | அரசுத் தேர்வுகள் மண்டல் துணை இயக்குநர் அலுவலகத்திற்கு 7 நகலெடுக்கும் இயந்திரம் வாங்குதல் | 8.00 |
| 17. | கோயமுத்துார் மண்டல அலுவலகத்திற்கு கூடுதல் வசதிகள் அமைத்துக் கொடுத்தல் | 18.00 |
| 18. | கழிவுத்தாட்களை எடையிட 7 மண்டல அலுவலகங்களுக்கு எடையிடும் இயந்திரம் வாங்குதல் | 3.60 |
| 19. | விடைத்தாள் மைய மதிப்பீட்டு முகாம் பணி மையங்களுக்கு நூறு மாற்று எண்ணிடும் இயந்திரங்கள் வழங்கிடுதல் | 3.00 |
| 20. | அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் மாநாட்டு கூட்ட | 4.56 |

| | | |
|---|---|---|
| | கட்டடத்திற்கு பொது அறிவிப்பு சாதனம் அமைத்தல் | |
| **பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி** | | |
| 21. | மாநில பெண்கள் எழுத்தறிவுத் திட்டம் | 36.19 |
| **ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி** | | |
| 22. | சமூகரங்கபுரம் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் உள் கட்டமைப்பினை மேம்படுத்துதல் | 60.00 |
| **மெட்ரிகுலேசன் பள்ளிகள்** | | |
| 23. | மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககத்திற்கு தளவாட சாமான்கள் வாங்குதல் | 1.00 |
| 24. | 15 மெட்ரிக் பள்ளிகள் ஆய்வாளர் அலுவலகங்களுக்கு நகலெடுக்கும் கருவி வாங்குதல் | 7.50 |
| 25. | மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககத்திற்கு தடையில்லா மின்சாரம் வழங்கும் சாதனம் வாங்குதல் | 1.00 |
| | **மொத்தம்** | 803.10 |

## அரசின் சாதனைகள்

## 2006-2007

- 1880 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும், 1525 அரசு உயர்நிலைப்பள்ளிகளுக்கும் கணினிகள் வழங்கப்பட்டன
- அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டு தொகுப்பூதியம் அளிக்கப்பட்டு வந்த ஆசிரியர்கள் அனைவரும் 1.6.2006 முதல் காலமுறை ஊதியத்திற்கு மாற்றப்பட்டனர்
- அனைத்துப் பள்ளிகளிலும் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை மாணவர்கள் கட்டாயமாகத் தமிழை ஒரு பாடமாகப் பயில வகை செய்யும் சட்டம் இயற்றப்பட்டது
- அரசு அனுமதி பெற்று மாநில அரசின் பாடத்திட்டத்தில் தமிழ்வழியில் கற்பிக்கும் அரசு மான்யம் பெறாத பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கும் இலவசப் பாடநூல்கள் வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது
- 120 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 120 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டன
- பொது நூலகங்களுக்கு வாங்கப்படும் நூல்களின் படிகள் எண்ணிக்கை 1000 ஆக உயர்வு
- ஆசிரியர் இடமாற்றத்திற்கு ஒளிவு மறைவற்ற வெளிப்படையான கலந்தாய்வு
- 7635 ஆசிரியர்கள் தேர்வு வாரியம் மற்றும் வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப் பட்டனர்
- பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் கல்வி வளர்ச்சி நாளாகப் பள்ளிகளில் கொண்டாடச் சட்டம்
- உயர்நிலை / மேல்நிலைப்பள்ளிகளில் 6,7,8 வகுப்புகளுக்கு கூடுதலாக 7979 பட்டதாரி ஆசிரியர் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு மூப்பு அடிப்படையில் நியமனம்
- 525 உயர்நிலைப் பள்ளிகளுக்குப் பட்டதாரி தமிழாசிரியர்கள் பணியிடம் வழங்கப்பட்டு நிரப்பப்பட்டுள்ளன
- 500 வட்டார வளமைய ஆசிரியர்கள் பணி மூப்பு அடிப்படையில் அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாற்றம்
- 2006 – 2007ல் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் 1075 பள்ளித் தொகுப்பு கருத்தாய்வு மையங்களுக்கு கட்டடம் கட்டப்பட்டது

- அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் 14354 கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

- பொது நூலகத் துறையில் பகுதி நேர நூலகர்கள் மற்றும் ஊர்ப்புற நூலகர்களாக 5 ஆண்டுகளுக்கு மேலாக தொகுப்பூதியத்தில் பணிபுரிந்த 207 பேர் மூன்றாம் நிலை நூலகர்களாக முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்யப்பட்டனர்.

<u>2007-2008</u>

- 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டன

- நவீன மாநில நூலகம் கட்டும் பணி தொடங்கி வைக்கப்பட்டது

- தமிழ் வழியில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் பத்தாம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுக் கட்டணம் நீக்கப்பட்டுள்ளது

- தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தொடக்க/நடுநிலைப் பள்ளிகளில் 1 முதல் 4 ஆம் வகுப்புகளில் செயல்வழிக் கற்றல் முறை தொடங்கி வைக்கப்பட்டது

- கல்வியில் பின்தங்கிய 8 மாவட்டங்களில் மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது

- உதவி தொடக்கக் கல்வி அலுவலர் பதவிக்கு நேரடி மற்றும் பதவி உயர்வு விகிதம் 30 : 70 என மாற்றம் செய்யப்பட்டுள்ளது

- தொடக்கக் கல்வித் துறையிலும், பள்ளிக் கல்வித் துறையிலும் காலி ஏற்பட்ட 13,683 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன

- பொருளாதாரம் / வணிகவியல் பாடங்களில் பட்டம் பெற்று பி.எட். பயின்றவர்களுக்கு நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் ஆகவும், பட்டதாரி ஆசிரியராகவும் பதவி உயர்வு வழங்கப்பட்டது

- பள்ளிக் கல்வித் துறையில் அலுவலர்களுக்கு மேலாண்மைப் பயிற்சி அளிக்க மாநிலக் கல்வி மேலாண்மை மற்றும் பயிற்சி நிறுவனம் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது

- 443 அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு கட்டடம், குடிநீர் வசதி, ஆய்வகம், கழிவறை வசதி, சுற்றுச் சுவர் மற்றும் தளவாட சாமான்கள் பணிகளுக்காக நபார்டு வங்கியிடம் நிதியுதவி கோரப்பட்டு முதல் தவணையாக ரூ.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது

- 1583 அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள 15,845 வகுப்பறைகளுக்கு மாணவர்கள் அமர இருக்கைகள், மேசைகள் மற்றும் ஆசிரியர்களுக்கு மேசை நாற்காலிகள் டான்சி நிறுவனம் மூலம் வழங்கப்பட்டுள்ளன

- 1000 அரசு உயர்நிலைப்பள்ளிகளுக்கு கணினி மற்றும் உபகரணங்கள் வழங்கப் பட்டுள்ளது

- நூறு விழுக்காடு தேர்ச்சி விகிதம் காட்டிய அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளுக்கு பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் ரூ.2000/- வழங்கப்பட்டுள்ளது

- மாணவ மாணவியருக்கு யோகா பயிற்சி அளிக்கப்படுகிறது

- மாணவர்களுக்கு வாழ்வியல் திறன் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது

- நல்லாசிரியர் விருதுத் தொகை ரூ.2,000-த்திலிருந்து ரூ.5,000-ஆக உயர்த்தப்பட்டுள்ளது

- 8 மாவட்டங்களில் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன

- கூடுதலாக 5 மெட்ரிக் பள்ளி ஆய்வர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன

- மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களுக்கு கட்டடம், பணியிடைப் பயிற்சி, ஆராய்ச்சி, கணினி மற்றும் நூல் வாங்கிட ரூ.20.21 கோடி வழங்கப்பட்டுள்ளது

- தருமபுரி மாவட்டத்திற்கு தனியாக மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது

- ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்திற்கான பணி அமைப்பு விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன

- 76 புதிய நூலகங்கள் திறக்கப்பட்டுள்ளன
- கோவை, மதுரை மாநகராட்சிப் பகுதிகளில் புத்தக கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளது
- வேலைவாய்ப்பகம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு ஐந்து வருட பணி முடித்த 27 பகுதிநேர நூலகர்கள், ஊர்ப்புற நூலகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்
- கோவை, தேனி மற்றும் திருச்சி ஆகிய பகுதிகளில் நூலக சீரமைப்பு மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன
- 30 மாவட்ட மைய நூலகங்களில் வாசகர்களின் பயன் பாட்டிற்கென கணினிகள் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு, வலைத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது
- அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட கோடைக்கால பயிற்சி முகாம் மூலம் சுமார் 12 இலட்சம் மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர்
- மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ரூ.2.25 கோடி செலவில் தமிழ் பாடநூல்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன

## 2008 - 2009

- தமிழ் வழியில் பயின்று 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 1000 மாணவ/ மாணவிகளுக்கு மாவட்ட வாரியான தரப்பட்டியல் அடிப்படையில் ஊக்கப்பரிசாக கணினிகள் வழங்கப்பட்டன
- 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களுக்கு கவனத்தை ஒருமுகப்படுத்தும் நேரமாக ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ள 10 நிமிடங்களுடன் விடைத்தாளில் விவரங்களை நிறைவு செய்தல் நேரமாக மேலும் 5 நிமிடங்கள் கூடுதல் கால அவகாசம் மார்ச் 2009 முதல் வழங்கப்படுகிறது
- 100 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்துதல்
- 500 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினி உதவியுடன் மொழி ஆய்வகங்கள் அமைத்தல்
- அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் 6650 நடுநிலைப் பள்ளிகளில் முதற்கட்டமாக 2200 பள்ளிகளுக்கு கணினிகள் வழங்கப்பட்டுள்ளன
- புத்தகப் பதிப்பாளர்கள், புத்தக விற்பனையாளர்கள் மற்றும் அத்துறையில் பணிபுரிவோர் நலன் காத்திட அவர்களுக்கென தனிநல வாரியம் ஒன்று அமைக்கப்படவுள்ளது
- அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்புகள் வரை பயிலும் மாணவர்களிடமிருந்து பெறப்படும் சிறப்புக்கட்டணம் ரத்துசெய்யப்பட்டுள்ளது
- அரசு மேல்நிலைப்பள்ளிகளில் தொழிற்கல்விப்பாடப் பிரிவில் விவசாயம் பயிலும் மாணவர்களுக்கு கற்பிக்க 176 விவசாயப் பயிற்றுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்
- பள்ளிகளில் கணினிக்கல்வியை மேம்படுத்தும் நோக்கில் 1686 கணினி பயிற்றுநர்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் நியமிக்கப்பட்டுள்ளனர்
- பள்ளிக் கல்வித் துறையில் நடப்பாண்டில் கட்டப்படும் அனைத்து கட்டடங்களுக்கும் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவு கட்டடம் என்று பெயர் சூட்டுதல்
- ஊராட்சி ஒன்றிய துவக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் மின் கட்டணத்தை அரசே ஏற்றுக் கொள்ளுதல்
- பேரூராட்சிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் சீரமைப்பு பணி மேற்கொள்ளுதல்
- 2008-2009ஆம் அண்டு 1005 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டன மற்றும் 1577 புதிய பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டன
- 2008-2009 ஆம் கல்வியாண்டில் 9397 ஆசிரியர் காலிப் பணியிடங்களை நிரப்ப ஆணையிடப்பட்டுள்ளது

- அரசுப் பள்ளிகளின் வளர்ச்சியில் தனியார் பங்கீட்டினை அதிகரிக்க பள்ளி வளர்ச்சித் திட்டம் (School Improvement Scheme) செயல்படுத்துதல்
- பள்ளிக் கல்வித் துறையில் மின் ஆளுகை (E-Governance) திட்டத்தினை செயல்படுத்துதல்
- அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் தொடக்கப் பள்ளிகளுக்கு ரூ.192 கோடி செலவில் 5949 வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன
- அனைத்து சமத்துவபுரங்களிலும் நூலகங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன
- 100 ஊர்ப்புற நூலகங்கள் கிளை நூலகங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன
- கிருஷ்ணகிரி மாவட்ட மைய நூலகம் மற்றும் மாவட்ட நூலகர் அலுவலகம் ரூ.1.00 கோடி மதிப்பிலும் ஈரோடு மாவட்டத்தில் நூலகம் ரூ.1.00 கோடி மதிப்பீட்டிலும் கட்டுதல்
- 47 நூலகங்களுக்கு ரூ.5.31 கோடி மதிப்பீட்டில் கட்டடங்கள்கட்டப்பட்டுள்ளன
- மாவட்டங்களில் செயல்படும் நூலகங்களுக்கு ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

<u>2009 – 2010</u>

- சமச்சீர் பள்ளிக்கல்வி முறையை நடைமுறைப்படுத்துவதற்காக தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக்கல்வி முறைச் சட்டம், 2010 இயற்றப்பட்டுள்ளது.
- பள்ளிகளில் கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துவதற்கு, தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டம், 2009 இயற்றப்பட்டு இச்சட்டம் 07.12.2009 அன்று முதல் அமல் படுத்தப்பட்டுளளது. இதற்கான சட்ட விதிகளும் 07.12.2009 முதல் அமலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.
- நபார்டு உதவியுடன் பகுதி 10 திட்டத்தின் கீழ் 2009-2010 ஆம் ஆண்டில் 303 அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவதற்காக ரூ.24706.52 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- மைய அரசு, பெண்கள் எழுத்தறிவில் 50 சதவீதத்திற்கும் குறைவாக உள்ள மாவட்டங்களில் ‘கற்கும் பாரதம்’ என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் தமிழ்நாட்டில் 5 மாவட்டங்களில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் புதிதாக எழுத்தறிவு பெற்ற கற்போர்கள் தாங்கள் பெற்ற எழுத்தறிவு திறனை நிலைப்படுத்திக் கொள்ளவும், மேம்படுத்திக் கொள்ளவும் உதவும்.
- 2500 நடுநிலைப் பள்ளிகளுக்கு பள்ளி ஒன்றுக்கு 3 மடிக்கணினி (Laptop) வீதம் ரூ.50.00 கோடி செலவில் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.
- முதன் முறையாக நேரடி நியமனம் மூலம் 67 உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
- 12,058 ஆசிரியர் காலிப்பணியிடங்களை நிரப்ப ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- 5 புதிய தொடக்கப் பள்ளிகள் துவங்கப்பட்டன மற்றும் 831 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டன.
- 115 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் மற்றும் 115 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.
- தேசிய பெண்கல்வி ஊக்குவிப்பு இடைநிலைக்கல்வித் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த எட்டாம் வகுப்பு தேர்வு பெற்று ஒன்பதாம் வகுப்பில் பயிலும் 16 வயதுக்குட்பட்ட மாணவியருக்கு ரூ.3000/-வீதம் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது.
- ரூ.100.00 இலட்சம் மதிப்பில் 100 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூட சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- ரூ.100.00 இலட்சம் மதிப்பில் 50 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 50 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணித ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- ரூ.52.00 இலட்சம் மதிப்பில் 500 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினி உதவியுடன் மொழி ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- ரூ.150.00 இலட்சம் மதிப்பில் திருவள்ளூரில் முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு புதிய அலுவலகக் கட்டிடம் கட்ட அனுமதியளிக்கப்பட்டுள்ளது.
- சுற்றுச்சூழல் கல்விக்கென ஒரு உதவி இயக்குநர் பணியிடம் (மாவட்ட கல்வி அலுவலர் நிலையில்) மற்றும் 32 திட்ட ஒருங்கிணைப்பாளர் பணியிடங்கள் (முதுகலை ஆசிரியர் நிலையில்) தோற்றுவிக்கப்பட்டுள்ளன.
- 31 முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கான நேர்முக உதவியாளர் பணியிடங்கள் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் நிலையில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.
- முதற்கட்டமாக 6ஆம் வகுப்பிற்கு கணினி அறிவியல் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு கணினி அறிவியல் பாடப்புத்தகம் அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.
- அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ், 6,7,8 வகுப்புகளில் பயிலும் மாணவ மாணவிகள் வசதிக்காக ரூபாய் 46.00 கோடி செலவில் பள்ளிகளுக்கு பெஞ்ச் மற்றும் டெஸ்க்குகள் வழங்கப்பட்டன. இதன்மூலம் 6.5 இலட்சம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.
- அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ், தொடக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் ஆங்கில மொழித் திறனை வளர்க்கும் வகையில் 75 ஆங்கில சிறுகதைப் புத்தகங்கள் (Supplementary Readers) உருவாக்கப்பட்டு அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்க/நடுநிலைப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்தை தலைமையிடமாகக் கொண்டு மாவட்ட கல்வி அலுவலகம் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- தொடக்கக் கல்வி இயக்ககத்தின் கீழ் செயல்படும் நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்களை அவர்களின் விருப்பத்தின் பேரில், பள்ளிக் கல்வி இயக்ககத்தின் கீழ் செயல்படும் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு அலகுவிட்டு அலகு மாற்றம் செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஜோகில்பட்டி அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனத்திற்கு ரூ.60.00 இலட்சத்தில் புதிய கட்டிட வசதி ஏற்படுத்தப்பட்டது.
- ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தின் மூலம் ரூ.5.22 கோடி செலவில் 82,000 ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி அளிக்கப்பட்டது.
- ஊர்ப்புற நூலகர்களுக்கு வழங்கப்பட்ட தொகுப்பூதியமான ரூ.1,500/- ஐ சிறப்புக் காலமுறை ஊதியமாக ரூ.2,500 – 5000 + ரூ.500/- என உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது.
- வாடகை கட்டடத்தில் செயல்படும் 25 கிளை நூலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்.

## கொள்கை விளக்கம் மற்றும் திட்டங்கள்

## 1. தொடக்கக் கல்வி

தொடக்கக் கல்வியே ஒரு மாணவனின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் அடிப்படைக் கூறாகும். நமது அரசு, 6 முதல் 14 வயதுள்ள அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தல் மற்றும் தக்க வைத்தல் மூலம் அனைத்துக் குழந்தைகளுக்கும் தொடக்கக் கல்வி அளிப்பதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 21வது பிரிவின்படி 6 முதல் 14 வயது வரையுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசமாகக் கட்டாயக் கல்வி அளித்திட மாநில அரசு வழிவகை செய்தல் வேண்டும். அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கடமையை, சேவை ஆர்வத்துடன் எய்திட ஏதுவாக ஏற்கனவே கட்டாயக் கல்விச் சட்டம் நடைமுறையில் உள்ளது. மாநில அரசு அனைவருக்கும் தரமான கல்வி அளிப்பதற்கான உறுதியான நடவடிக்கைகளையும், தொடர் முயற்சிகளையும் எடுத்துள்ளது. இதன் மூலம், தமிழகத்தில் ஓர் கல்விப் புரட்சியை ஏற்படுத்தி, அதன் வழி பள்ளியில் கற்கும் குழந்தைகள் அனைவரும் வளமான, பாதுகாப்பான, மகிழ்வான வருங்காலத்தைப் பெறுகிறோம் என்ற உணர்வுடன், அமைதியும், சமத்துவமும், உலகளாவிய சகோதரத்துவமும் பெற்றுச் சிறப்பு எய்துவர் என்பதற்கான உத்தரவாதத்தை நல்கும் கல்வித் திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது.

### 1.1. குறிக்கோள்களும் மற்றும் செயல்பாடுகளும்

1. அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தல் மற்றும் தக்க வைத்தல்.
2. விரும்பத்தக்கத் தரமான கல்வியை உறுதி செய்தல்.
3. குழந்தைகளின் ஒட்டுமொத்த உணர்வு வளம், சமுதாய மற்றும் உடல்வளம் இவற்றோடு அறிவாற்றல் திறமைகளையும் மேம்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்துதல்.
4. கல்வி பெறாதவர்களுக்குக் கல்வி சென்றடையும்படி செய்தல் மற்றும் சமுதாய உணர்வை உறுதி செய்தல்.
5. அனைத்துப் பள்ளிகளிலும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்.
6. தொடக்கக் கல்வி நிலையில் அனைத்துப் பாலின மற்றும் சமுதாய இடைவெளிகளைப் போக்குதல்.

### 1.2. புதிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளைத் தோற்றுவித்தல்

ஊர்ப்புறங்களில் உள்ள குழந்தைகளின் கல்வித் தேவைகளைக் கருத்தில் கொண்டு புதிதாக தொடக்கப் பள்ளிகள் துவங்கவும் மற்றும் தொடக்கப் பள்ளிகளில் பயின்று வரும் மாணவர்கள் தொடர்ந்து கல்வி பயிலவும் ஏதுவாக தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தியும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த நான்கு ஆண்டுகளில் இவ்வாறு புதிதாக தொடங்கப்பட்ட தொடக்கப்பள்ளிகள் மற்றும் தரம் உயர்த்தப்பட்ட நடுநிலைப் பள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு:

| ஆண்டு | தொடக்கப் பள்ளிகள் | நடுநிலைப் பள்ளிகள் |
|---|---|---|
| 2006 - 2007 | 126 | 234 |
| 2007 - 2008 | 210 | 338 |
| 2008 - 2009 | - | 1005 |
| 2009 - 2010 | 5 | 831 |
| **மொத்தம்** | **341** | **2408** |

### 1.3. ஆசிரியர் நியமனம்

பள்ளிகளின் மேம்பாட்டிற்கு அடிப்படையானது, தேவையான ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதலே என்பதை உணர்ந்துள்ள அரசு, ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப முன்னுரிமை அளிக்கிறது, இதன் அடிப்படையில் காலியாக உள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடங்களும், பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் ஒளிவு மறைவற்ற கலந்தாய்வு மூலம் நிரப்பப்படுகின்றன. 2006–2007 ஆம் கல்வி ஆண்டு முதல் நிரப்பப்பட்டுள்ள ஆசிரியர் பணியிடங்களின் விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

| கல்வி ஆண்டு | ஆசிரியர் பணியிட விவரம் | | |
|---|---|---|---|
| | இடைநிலை ஆசிரியர் | பட்டதாரி ஆசிரியர் | உடற்கல்வி ஆசிரியர் |
| 2006 – 2007 | 2353 | 2435 | - |
| 2007 – 2008 | 5882 | 4124 | 40 |
| 2008 – 2009 | 5773 | 3331 | 63 |
| 2009 – 2010 | 1943 | 3209 | 14 |
| **மொத்தம்** | **15951** | **13099** | **117** |

2009–2010 ஆம் ஆண்டில் தரம் உயர்த்தப்பட்ட தொடக்கப் பள்ளிகளுக்கு 203 புதிய தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களும் 2174 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

முதன்முறையாக 67 உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட்டுள்ளன.

### 1.4. ஆசிரியர்களுக்கு பயிற்சி

ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, தொடக்கக் கல்வித் துறையால் பணிநியமனம் வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு நுழைநிலைப் பயிற்சியும், நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு யூனிசெப் நிறுவனத்தின் நிதி உதவியோடு மனிதவள மேம்பாட்டுப் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

### 1.5. செயல்வழிக் கற்பித்தல் முறை

அனைவருக்கும் கல்வி இயக்ககம் மற்றும் தொடக்கக் கல்வி இயக்ககம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியினால் புதுமையான செயல்வழிக்கற்றல் முறை தொடங்கப்பட்டு பள்ளிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

### 1.6. செயல்வழிக்கற்றல் என்னும் புதிய கற்பித்தல் முறையின் சிறப்பு இயல்புகள்

- ❖ குழந்தைகளை மையமாகக் கொண்டது.
- ❖ திறன்களை அடிப்படையாகக் கொண்டது.
- ❖ கற்போரிடையே தன்முனைப்பு, படைப்பாற்றல், ஒருமைப்படுத்துதல், தன்னம்பிக்கை ஆகியவற்றை வளர்க்கிறது.
- ❖ மகிழ்வுடன் கற்கச் செய்கிறது.
- ❖ குழந்தைகளை ஊக்குவிக்கும் மையங்களாகப் பள்ளிகளை மாற்றுகிறது.

### 1.7. ஆசிரியர்களின் கற்பிக்கும் தரத்தை மேம்படுத்துதல்

குழந்தைகளை மையமாகக் கொண்டு அவர்களைப் பல்திறன் கொண்டவர்களாக உருவாக்கும் கல்வி முறை, செயல்படும் இக்காலச் சூழலில், ஆசிரியர்களின் கற்பிக்கும் உத்திகளை வளப்படுத்திக் கொள்ள அனைவருக்கும் கல்வி இயக்கத் (SSA) திட்டத்தின் கீழ் பல்வேறு பணியிடைப்பயிற்சிகள், ஆசிரியர் மற்றும் பயிற்சி இயக்ககத்தின் ஒத்துழைப்போடு வழங்கப்படுகின்றன.

கலந்தாய்வு மூலம் நியமனம் செய்யப்படும் ஆசிரியர்கள் அவர்களுடைய கற்பித்தல் திறனை வளர்க்கும் பொருட்டு மாவட்ட அளவில் நுழைநிலைப் பயிற்சியும், மற்றும் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு யோகா மற்றும் தியானப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இது தொடர்ந்து அளிக்கப்படும்.

## நலத்திட்டங்கள்

குழந்தைகளின் வளர்ச்சி என்பது, சமுதாய வளர்ச்சியோடு பின்னிப் பிணைந்துள்ளது என்பதைக் கருத்தில் கொண்ட அரசு, பள்ளிக் குழந்தைகளுக்கான பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

### 1.8. இலவச மதிய உணவுத் திட்டம்

தமிழக அரசு, பள்ளிகளில் இலவச மதிய உணவு வழங்கும் திட்டத்தின் முன்னோடியாகவும், முன்மாதிரியாகவும் திகழ்ந்து வருகிறது. இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகத் தற்போது பள்ளிக் குழந்தைகளுக்கு வாரம் மூன்று முட்டைகள் அல்லது மூன்று வாழைப்பழங்கள் வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டு, பெருந்தலைவர் காமராஜர் பிறந்த தினமான ஜூலை 15-ஆம் நாள் அன்று துவக்கி வைக்கப்பட்டு, 2006ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் வாயிலாக 41,65,272 குழந்தைகள் பயன்பெற்று வருகின்றனர்.

### 1.9. இலவச பாடநூல் வழங்கும் திட்டம்

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள் மற்றும் அரசின் அங்கீகாரம் பெற்று மாநிலப் பாடத்திட்டத்தைப் பின்பற்றும் சுயநிதிப்பள்ளிகளில் பயின்று வரும் அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசப் பாடநூல்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இதனால் 50,97,108 மாணவ, மாணவியர் பயன்பெறுகின்றனர்.

### 1.10. இலவச சீருடை வழங்கும் திட்டம்

இலவச மதிய உணவுத் திட்டத்தின் கீழ்ப் பயன்பெறும் குழந்தைகளுக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் 41,65,272 மாணவ, மாணவியர் பயன் பெறுகின்றனர்.

### 1.11. இலவச பேருந்து பயணச் சலுகைத் திட்டம்

மாநிலப் பாடத்திட்டத்தைப் பின்பற்றி 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்துவரும் மாணவ மாணவிகள் தத்தம் கல்வி நிலையங்களுக்கு வசதியாகச் சென்றுவர இலவசப் பேருந்து பயணச் சலுகைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் 1,33,652 மாணவ, மாணவியர் பயன் பெறுகின்றனர்.

### 1.12. நடமாடும் நூலகம் மற்றும் அறிவியல் ஊர்தி

நூல்கள் படிக்கும் பழக்கத்தை மாணவர்களிடையே ஊக்குவிக்க, பொது நூலக இயக்ககத்தின் ஒத்துழைப்புடன் நடமாடும் ஊர்திகளின் மூலம் நூல்கள் வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது. மேலும் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலகங்களுடன் இணைந்து நடமாடும் வகுப்பறைகளாக செயல்படும் அறிவியல் ஊர்திகளின் வாயிலாக, தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி மாணவ, மாணவியர் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வியில் மேம்பாடு அடைய அறிவியல் கல்வி அளிக்கப்படுகின்றது.

### 1.13. மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள்

5,534 மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளின் கல்வி நலன் கருதியும், பாதுகாப்புக் கருதியும் வரையறுக்கப்பட்ட விதிகளின்படி முதன்மைக் கல்வி அலுவலரால் இப்பள்ளிகளுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. அப்பள்ளிகளின் செயல்பாடுகளையும் அங்கு பயிலும் குழந்தைகளின் பாதுகாப்பினையும் அரசு கண்காணித்து வருகிறது.

### 1.14. சிறந்த பள்ளிகளுக்கான விருது வழங்கும் திட்டம்

ஆண்டுதோறும் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் மூன்று பள்ளிகளைத் தெரிவு செய்து சிறந்த பள்ளிகளுக்கான விருது வழங்கப்படுகிறது. சிறந்த பள்ளிகள் பின்வரும் தகுதிகளின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுகின்றன:

- கூடுதல் சேர்க்கை விகிதம் குறிப்பாக தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் பெண் குழந்தைகள் சேர்க்கை
- குறைந்த இடைநிற்றல் விகிதம்
- கூடுதல் கற்றல் நிறைவு செய்தோர் விகிதம்
- கூடுதல் தக்க வைத்தோர் விகிதம்
- பெற்றோர் ஆசிரியர் கழகச் செயல்பாடுகள்
- சமுதாயப் பங்கேற்பு நிகழ்வுகள்
- கல்வி மற்றும் சார் செயல்பாடுகளில் புதுமையான கற்றல் முறைகளை ஊக்குவித்தல்

### 1.15. தரமேம்பாட்டுச் செயல்பாடுகள்

பள்ளிகளின் தரத்தினை மேம்படுத்துவதில் தமிழ்நாடு தொடர்ந்து பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டில் செயல்படும் அனைத்துத் தொடக்கப் பள்ளிகளிலும் செயல்வழிக் கற்றல் முறை செயல்படுத்தப்படுகிறது. நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 வரை உள்ள வகுப்புகளுக்குப் படைப்பாற்றல் கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மாணவர்கள் செயல்பாடுகளின் மூலம் கற்றலில் ஈடுபட்டு, கற்பதற்கு ஏதுவாக ஆசிரியர்களின் பணி அமைந்துள்ளது. இப்புதிய கற்றல் கற்பித்தல் முறைகளின் மூலம் மாணவர்களுக்கு தன்னம்பிக்கை வளர்கிறது. புதிய கலைத் திட்டம் மற்றும் வகுப்பறைச் செயல்பாடுகளில் ஏற்பட்டுள்ள புதிய அணுகுமுறைகள் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பினைப் பெற்றுள்ளது.

தமிழகத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியத் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி மாணவர்களின் அறிவியல் அறிவையும் மற்றும் கணினிக் கல்வி கற்கும் ஆர்வத்தையும் வளர்க்கும்

வகையில் தொலைக்காட்சிப் பெட்டிகள், டி.வி.டி. சாதனங்கள் மற்றும் கற்பிப்புக் குறுந்தகடுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 4700 நடுநிலைப்பள்ளிகளுக்கு மடிக்கணினிகளும் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள நடுநிலைப்பள்ளிகளுக்கு மடிக்கணினிகள் வழங்க நடப்புக் கல்வியாண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.

### 1.16. குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009

குழந்தைகளுக்கான தொடக்கக்கல்வியும் அடிப்படை உரிமைகளுள் ஒன்றாக கருதப்பட ஏதுவாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு தகுந்த திருத்தம் 2002 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதனையொட்டி குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச்சட்டம் 2009 அண்மையில் மைய அரசால் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டம் 1.4.2010 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. 6 முதல் 14 வயதுகுட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் தரமான இலவச தொடக்கக் கல்வி வழங்குவதே இச்சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இச்சட்டத்தின் கீழ் மாநில அரசுகள் தகுந்த விதிகளை இயற்ற மாநில அரசுகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் பிரிவு 38ன் கீழ் மாநில அரசுகள் இச்சட்டத்தை செயல்படுத்த தகுந்த விதிகளை இயற்ற வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச்சட்டம் 2009-ஐ செயல்படுத்த ஏதுவாக உரிய விதிகளை இயற்ற மாநில அரசு முனைந்துள்ளது.

### அனைவருக்கும் கல்வி இயக்கம்

அனைவருக்கும் கல்வி இயக்கம், அனைத்துப் பள்ளி வயது குழந்தைகளுக்கும் தொடக்கக் கல்வி அளித்திட செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டமாகும். இத்திட்டத்தின் அனைத்துக் கூறுகளிலும் தொடர்ந்து தமிழ்நாடு முன்னேற்றம் கண்டுள்ளது. பின்வரும் குறிக்கோள்களை அடையும் பொருட்டு, பல்வேறு முயற்சிகள் இவ்வியக்கம் மூலம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 1.17. திட்டக் குறிக்கோள்கள்

- அனைத்துப் பள்ளி வயது குழந்தைகளையும், பள்ளிகள், கல்விக் காப்புறுதி மையங்கள், மாற்றுப் பள்ளிகள் மற்றும் “மீண்டும் பள்ளியில் சேர்த்தல் முகாம்” ஆகியவற்றில் சேர்த்தல்.
- அனைத்துச் சமுதாய, பாலின வேறுபாடுகளை ஆரம்பக் கல்வி நிலையில் 2010 ஆம் ஆண்டிலும் முற்றிலுமாகக் களைதல்
- 2010 ல் பள்ளியில் சேர்ந்த அனைத்துக் குழந்தைகளையும் தக்க வைத்தல்
- வாழ்க்கைக்கு உகந்த தரமான தொடக்கக் கல்வியை உறுதி செய்தல்

### 1.18. 2009-10 ஆம் ஆண்டில் சாதனைகள்

*திட்ட மதிப்பீடு மற்றும் செலவினம்*

இவ்வாண்டின் (2009-2010) திட்ட ஒதுக்கீடான ரூ.862.30 கோடியில் ரூ.780.58 கோடி பல்வேறு செயல் திட்டங்களுக்காக அனைத்து மாவட்டங்களிலும் செலவிடப்பட்டுள்ளது.

*புதிய பள்ளிகள் தொடங்குதல் மற்றும் ஆசிரியர்கள் நியமனம்*

- 5 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 831 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.
- 2076 கூடுதல் ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப் பட்டுள்ளன.

*கட்டடப் பணிகள்*

- 5 தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள் மற்றும் 831 நடுநிலைப் பள்ளிக் கட்டடங்கள் கட்டப்படுகின்றன.
- 793 கழிவறைகள், 3078 பெண் குழந்தைகளுக்கான கழிவறைகள், மற்றும் 437 பள்ளிகளில் குடிநீர் வசதிகள் ஏற்படுத்தப்படுகிறது.
- பள்ளிகளில் 24,740 மீட்டர் சுற்றுச் சுவர் கட்டப்பட்டு வருகிறது.
- 6, 7 மற்றும் 8 வகுப்புகளில் பயிலும் 9,24,490 குழந்தைகளுக்கு இருக்கை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

*இடைநின்ற மாணவர்களை மீண்டும் பள்ளியில் சேர்த்தல்*

66,896 பள்ளிக் கல்வியைத் தொடரா குழந்தைகளில் 55,374 குழந்தைகள் மீண்டும் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

*ஆசிரியர் பயிற்சி*

இரண்டு லட்சம் ஆசிரியர்களுக்கு தேவையின் அடிப்படையில் பணியிடைப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

**1.19. கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா திட்டம்**

11-14 வயதுள்ள இடைநின்ற பெண் குழந்தைகளின் தொடர் கல்விக்காக *கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா* திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் 11 மாவட்டங்களில், பெண் கல்வியில் பின்தங்கிய 38 ஒன்றியங்களில் செயல் படுத்தப்படுகிறது. 3,101 பெண் குழந்தைகள் 54 உண்டு உறைவிடப் பள்ளிகளில் கல்வி பெறுகின்றனர்.

**1.20. தரமேம்பாட்டுச் செயல்பாடுகள்**

பள்ளிகளின் தரத்தினை மேம்படுத்துவதில் தமிழக அரசு தொடர்ந்து பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டில் செயல்படும் அனைத்து 37,486 தொடக்கப் பள்ளிகளில் செயல்வழிக் கற்றல் முறை செயல்படுத்தப்படுகிறது. நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 வரை உள்ள வகுப்புகளுக்குப் படைப்பாற்றல் கல்வி முறை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. மாணவர்கள் செயல்பாடுகளின் மூலம் கற்றலில் ஈடுபட்டு கற்பதற்கு ஏதுவாக ஆசிரியர்களின் பணி அமைந்துள்ளது. இப்புதிய கற்றல் கற்பித்தல் முறைகளின் மூலம் மாணவர்களுக்கு தன்னம்பிக்கை வளர்ந்துள்ளது. புதிய கலைத் திட்டம் மற்றும் வகுப்பறைச் செயல்பாடுகளில் ஏற்பட்டுள்ள புதிய அணுகுமுறைகளுக்கு, ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பு உள்ளது.

**1.21. செயல்வழிக் கற்றல்**

செயல்வழிக்கற்றல் வகுப்பறைகளை கடந்த இரு ஆண்டுகளில் அருணாசலப் பிரதேசம், ஜார்கண்ட், கர்நாடகா, குஜராத், மிசோரம், இமாச்சலப் பிரதேசம், இராஜஸ்தான், ஜம்மு காஷ்மீர், மகாராஷ்டிரா, நாகாலாந்து, சத்தீஸ்கர், ஒரிசா, கேரளா ஆகிய மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலிருந்து கல்வியாளர்கள், அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களும், ஸ்ரீலங்கா, நெதர்லேண்ட், ஆஸ்திரேலியா, சீனா, சிங்கப்பூர், பங்களாதேஷ், இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து கல்வியாளர்களும் பார்வையிட்டு பாராட்டியுள்ளனர்.

பாண்டிச்சேரி, சத்தீஸ்கர், இராஜஸ்தான், மகாராஷ்டிரா, நாகாலாந்து, குஜராத், அருணாச்சல பிரதேசம், திரிபுரா, ஒரிசா ஆகிய மாநிலங்களில் செயல்வழிக் கற்றல் முறை தமிழகத்தை பின்பற்றி செயல்படுத்த துவங்கியுள்ளனர்.

தமிழகத்தில் செயல்வழிக்கற்றல் முறையை தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் சிறப்பாக செயல் படுத்தியமைக்காக முன்னாள் மாநிலத் திட்ட இயக்குநர் திரு.எம்.பி.விஜயகுமார், இ.ஆ.ப.,(ஓய்வு) அவர்களுக்கு மாண்புமிகு பாரதப் பிரதமர் விருது வழங்கப்பட்டுள்ளது.

### 1.22. கல்விக் குறியீடுகளின் முன்னேற்றம்

தொடக்கநிலையில் 2005-2006ல் 3.81% ஆக இருந்த இடைநிற்றல் 2008-2009ல் 1.02% ஆகவும், நடுநிலையில் 2005-2006ல் 7.58% ஆக இருந்த இடைநிற்றல் 2008-2009ல் 1.88% ஆகவும் குறைந்துள்ளது.

கடந்த ஆண்டு கல்வித் திட்டம் மற்றும் நிர்வாக தேசிய பல்கலைக் கழகத்தால் அனைத்து மாநிலங்களிலும் கல்வி வளர்ச்சிக் குறியீட்டின் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வு அறிக்கையின்படி தமிழகம் தொடக்கக் கல்வி மற்றும் நடுநிலைக் கல்வி வளர்ச்சிக் குறியீட்டில் 5-வது இடத்தில் உள்ளது.

### 1.23. 2010-2011 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ள முக்கியச் செயல் திட்டங்கள்

பின்வரும் திட்டங்கள் அனைத்தும் ரூ. 1211.626 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**கட்டடப் பணிகள்**

- ❖ புதிதாக தொடங்கப்படும் தொடக்கப் பள்ளிகளுக்கும் மற்றும் தரம் உயர்த்தப்படும் நடுநிலைப் பள்ளிகளுக்கும் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.
- ❖ 20 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள்
- ❖ 4710 மாணவிகளுக்கான கழிவறைகள்
- ❖ 39,000 மீட்டர் சுற்றுச்சுவர் பள்ளிகளில் கட்டுதல்
- ❖ 3,273 பள்ளிகளுக்குச் சாய்தள வசதி ஏற்படுத்துதல்
- ❖ 1,853 பள்ளிகளில் தலைமையாசிரியர் அறை ஏற்படுத்துதல்
- ❖ 1,773 தொடக்கப் பள்ளிகள் மற்றும் 1,773 நடுநிலைப் பள்ளிகளுக்கு விளையாட்டுப் பொருள்கள் வழங்குதல்
- ❖ 22,642 தொடக்கப் பள்ளிகள் மற்றும் 8,290 நடுநிலைப் பள்ளிகளுக்கு நூலக வசதி ஏற்படுத்துதல்

**மானியங்கள்**

- ❖ புதிய தொடக்கப் பள்ளிகளுக்குக் கற்றல் கற்பித்தல் மானியமாக பள்ளி ஒன்றிற்கு ரூ.20,000/- வீதம் வழங்குதல்.
- ❖ நிலை உயர்த்தப்படும் நடுநிலைப் பள்ளிகளுக்குக் கற்றல் கற்பித்தல் மானியமாக பள்ளி ஒன்றிற்கு ரூ.50,000/- வீதம் வழங்குதல்.
- ❖ ரூ.7,500 வீதம் 35,255 பள்ளிகளுக்கு பராமரிப்பு மானியம் வழங்குதல்.
- ❖ ரூ.5,000 வீதம், 37,761 தொடக்கப் பள்ளிகளுக்கும் ரூ.7,000 வீதம் 16,047 நடுநிலைப் பள்ளிகளுக்கும் பள்ளி மானியம் வழங்குதல்.

- ❖ தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் 2,03,485 ஆசிரியர்களுக்கு ரூ.500 வீதம் கற்றல் கற்பித்தல் மானியம் வழங்குதல்.

**இடைநின்ற மாணவர்களைப் பள்ளியில் சேர்த்தல்**

- ❖ 56,113 இடைநின்ற மாணவர்கள் தொடர்ந்து கல்வி பெற, உண்டு உறைவிட முகாம்கள், இணைப்பு மையங்கள், கோடைகாலச் சிறப்பு முகாம்கள் மற்றும் சிறப்பு உண்டு உறைவிட முகாம்கள் போன்ற, செயல்திட்டங்கள் மூலம் பள்ளிகளில் சேர்க்கப்படுவர்.

**பணியிடைப் பயிற்சி**

- ❖ 2,03,485 ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி வழங்குதல்.

**புதிய அணுகுமுறையிலான திட்டங்கள்**

- ❖ முன்பருவ மழலையர் கல்வித் திட்டம் மூலம் 24,815 அங்கன்வாடிப் பணியாளர்களுக்குப்பயிற்சி வழங்குதல் மற்றும் 24,368 மையங்களுக்கு விளையாட்டு / கல்வி உதவி உபகரணங்கள் வழங்குதல்.
- ❖ 59,490 தாழ்த்தப்பட்ட மாணவர்கள் மற்றும் 29,876 சிறுபான்மை மாணவர்களுக்கு வாழ்வியல் திறன் சார் பயிற்சி வழங்குதல்.

**கிராமக் கல்விக் குழு உறுப்பினர்களுக்கானப் பயிற்சி**

- ❖ கிராமக் கல்விக் குழுக்களைச் சார்ந்த 2,62,572 உறுப்பினர்களுக்கு இத்திட்டத்தில் பங்குப் பணிகள் பற்றி பயிற்சி அளிக்கப்படும்.

**1.24. கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா**

1. 11 மாவட்டங்களில் கல்வியில் பின்தங்கிய 38 ஒன்றியங்களில் செயல்படும் 54 உண்டு உறைவிடப் பள்ளிகளைத் தொடர்ந்து நடத்துதல்.

- ❖ 50 பெண் குழந்தைகள் பயிலும் (மாதிரி 2) 17 உண்டு உறைவிடப்பள்ளிகள் 100 பெண் குழந்தைகள் பயிலும் (மாதிரி 1) உண்டு உறைவிடப்பள்ளிகளாக நிலை உயர்த்தப்படுகின்றன.

# 2. இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி

## 2.1. நோக்கங்கள்

இடைநிலைக் கல்வியின் தரத்தை மேம்படுத்தி, உயர்நிலைப்பள்ளி அளவில் இடைநிற்றலை நீக்கி, அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் தரமான கல்வியை உறுதி செய்வதே இந்த அரசின் முக்கிய நோக்கமாகும்.

## 2.2. குறிக்கோள்கள்

1. 2017 ஆம் ஆண்டுக்குள் அனைத்துக் குழந்தைகளுக்கும் அவரவர் வயதுக்கேற்ற வகையில் இடைநிலைக்கல்வியை வழங்குதல்.
2. 2020 ஆம் ஆண்டுக்குள் அனைத்துக் குழந்தைகளுக்கும் அவரவர் வயதுக்கேற்ற வகையில் மேல்நிலைக்கல்வியை வழங்குதல்.
3. அனைவருக்கும் தரமான கல்வியை உறுதி செய்தல்.
4. தேவையுள்ள இடங்களில் உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளை அமைத்தல்.
5. பால், இனம், சமூகம் மற்றும் மாற்றுத் திறன் கொண்டோர் ஆகிய அனைவருக்கும் சமமான, தரமான கல்வியை உறுதி செய்தல்.
6. தரமான கற்பித்தலை உறுதி செய்வதற்காக ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி வழங்குதல்.
7. கணிப்பொறி உதவியோடு கற்றல் அவசியத்தை எடுத்துரைத்தல்.
8. வாழ்வியல் திறன்கள் மற்றும் தொழிற் கல்வியை வழங்குதல்.
9. மொழியைச் சரளமாகப் பயன்படுத்துதல் மற்றும் தகவல் தொடர்புத் திறன்களை வளர்த்தல்.

## 2.3. வழி முறைகள்

மேற்குறிப்பிட்ட அனைத்துக் குறிக்கோள்களையும் அடையத் தேவையான இடங்களில் புதிய உயர்நிலை / மேல்நிலைப்பள்ளிகளைத் துவக்குதல், மாணவர் சேர்க்கையில் சிறப்புக் கவனம் செலுத்துதல், நபார்டு வங்கியின் உதவியுடன் தேவைப்படும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், கணிப்பொறி வாயிலாக கற்றல் கற்பித்தல் உத்தியினையும், மின்னணுக் கருவிகளையும் பயன்படுத்திக் கற்றல், கற்பித்தல் நிகழ்வினை மேம்படுத்துதல் ஆகிய வழிமுறைகள் மூலம், மேற்குறிப்பிட்டுள்ள நோக்கங்கள் எட்டப்படும்.

மேலும், பணி முன் பயிற்சி மற்றும் பணியிடைப் பயிற்சியை மேம்படுத்துதல், கல்வியில் பின் தங்கிய மாவட்டங்களில் புதிய மாதிரிப் பள்ளிகளை உருவாக்குதல், 14 முதல் 18 வயது வரையுள்ள பெண் குழந்தைகளுக்கானத் தங்குமிட வசதியை ஏற்படுத்துதல் மற்றும் நலிவுற்ற மற்றும் சமூகத்தால் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டிய பிரிவினர்களுக்கும் நலத் திட்டங்களை உறுதி செய்வதன் வாயிலாகவும் மேற்குறிப்பிட்டுள்ள குறிக்கோள்களை அடையத் திட்டமிடப்பட்டுள்ளது.

### நலத்திட்டங்கள்

## 2.4. இலவச மிதிவண்டி வழங்குதல்

இலவச மிதிவண்டி வழங்கும் திட்டம் அரசால், அரசு/ அரசு நிதி உதவிபெறும் / பகுதி நிதி உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

2009-10ம் ஆண்டு இத்திட்டத்தின்கீழ் இதர வகுப்பு மாணவ மாணவியருக்கு இலவசமிதிவண்டி வழங்க அரசால் ரூ.3.66 கோடி பள்ளிக் கல்வித் துறைக்கு அனுமதிக்கப்பட்டது.

மேற்காண் வகுப்பின மாணவர்கள் உட்பட, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகிய இனத்தைச் சார்ந்த மொத்தம் 5,59,608 மாணவர்கள் இதன்மூலம் பயனடைந்து உள்ளனர்.

**2.5. பாடப்புத்தகங்கள் வழங்குதல்**

தமிழக அரசால் தரமான பாடப்புத்தகங்கள் தயாரிக்கப் பட்டு, அவை அரசுப் பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 12 வகுப்புவரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும், மற்றும் சுயநிதி பள்ளிகளில், மாநிலப் பாடத் திட்டத்தின்கீழ் தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென அரசு 2009-10ம் கல்வியாண்டில் ரூ.28.60 கோடி ஒதுக்கீடு செய்தது. 66,03,056 மாணவர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன் அடைந்துள்ளனர்.

**2.6. இலவசப் பேருந்துச் சீட்டு**

மாணவர்களுக்கு இலவசப் பேருந்து பயணச் சீட்டுகள் வழங்கும் திட்டத்திற்கு அரசால் ரூ.300.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது.

**2.7. ஆங்கில மொழி ஆய்வகங்கள் மற்றும் கணினி வழி மொழி பயிலும் ஆய்வகங்கள்**

மாணவர்களின் ஆங்கில உரையாடல் திறன்களை வளர்த்து, நல்ல வேலை வாய்ப்புகளை மாணவர்கள் பெறும் வகையில் ஆங்கில மொழி ஆய்வகங்கள் நிறுவிட அரசுப் பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒரு பள்ளிக்கு ரூ.5.00 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2006-07 முதல் 2008-09 ஆம் ஆண்டு வரையில் 76 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் ரூ.380.00 இலட்சம் செலவில் இவ்வாய்வகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இவ்வாறு செயல்பட்டுவரும் ஆங்கில மொழி ஆய்வகங்கள், கணினி உதவியுடன் மொழி பயிலும் ஆய்வகங்களாக படிப்படியாக மாற்றப்பட உள்ளது. இத்திட்டம் 2008-09 ஆம் ஆண்டில் 500 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது. 2009 – 2010 ஆம் ஆண்டில் 500 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் எல்காட் நிறுவனம் மூலம் மென்பொருள் மற்றும் வன்பொருள் வழங்கி ஆங்கில மொழி ஆய்வகங்கள் நிறுவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத் திட்டத்தினைச் சீரிய முறையில் செயல்படுத்தும் வகையில் அனைத்து ஆசிரியர்கட்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 2010-2011 ஆம் ஆண்டில் கூடுதலாக 500 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட தீர்மானிக்கப் பட்டுள்ளது.

**2.8. கணித ஆய்வகங்கள்**

கணிதப் பாடத்தினைக் கற்பிக்கவும், மாணவர்களுக்கு கணிதப் பாடத்தின் மீதுள்ள அச்சத்தினைப் போக்குகின்ற வகையிலும், கணிதத்தில் கற்றல், கற்பித்தலில் புதிய உத்திகளைக் கையாண்டு, மாணவர்களிடையே கணிதப் பாடத்தில் புதிய சிந்தனைகளைப் புகுத்தவும் அவர்களது சிந்தனைகளை மேம்படுத்திடவும் பள்ளிகளில் கணித ஆய்வகங்கள் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இத்திட்டம் 6 முதல் 10 வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் பயன் பெறும் வகையில் 2008-09 ஆம் ஆண்டு கிராமப்புறத்திலுள்ள 100 அரசு உயர்நிலைப் பள்ளிகளில் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

2009-10ஆம் ஆண்டில் 50 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 50 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணித ஆய்வகங்கள் அமைத்திட அரசால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. வரும் 2010-11ஆம் ஆண்டிலும் இத்திட்டம் மேலும் 50 அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும், 50 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**2.9. தமிழ் வழியில் பயின்ற மாணவர்களில் முதல் மதிப்பெண் பெற்றவர்களுக்கு மடிக்கணினி வழங்குதல்**

2008 ஆம் ஆண்டிலிருந்து பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதி, முதல் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்குப் பரிசாக 'மடிக்கணினி' வழங்கும் புதிய திட்டம் அரசால் அறிமுகப்படுத்தப் பட்டது. 2009-10ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.2.37 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 1105 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டம் மாணவர்கள் கணினி அறிவை வளர்த்துக் கொள்ளவும், உயர் கல்வி பயில ஊக்குவிக்க வழி வகுப்பதாகவும் அமைந்துள்ளது.

**2.10. அறிவியல் ஆய்வக வசதிகளை மேம்படுத்துதல்**

ஒவ்வொரு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளியிலும் அறிவியல் பாடத்தினை திறம்படக் கற்பிக்க, செய்முறைத் திறமைகளை வளர்க்கின்ற வகையில், போதிய அறிவியல் உபகரணங்களுடன் ஆய்வகங்கள் அமைப்பது மிகவும் அவசியமாக உள்ளது. 2009-10ஆம் கல்வியாண்டில் 100 உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் உபகரணங்கள் வழங்கிட ரூ.40.00 இலட்சமும், 100 மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.100.00 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2010-11 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதன் மூலம் 200 பள்ளிகள் கூடுதலாக பயன் அடைய உள்ளன.

**2.11. நூலக வசதிகளை மேம்படுத்துதல்**

மாணவர்களிடையே புத்தகங்கள் படிக்கும் திறனைத் தூண்டும் வகையில் உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகளுக்குப் புத்தகங்களை வழங்கி நூலக வசதிகளை அரசு மேம்படுத்தியுள்ளது. அனைத்து வகையான பாடங்கள், பொது அறிவு, சுற்றுச்சூழல், மனையியல், உணவு, விளையாட்டு போன்ற பல வகையான நூல்கள் தேர்வு செய்யப்பட்டு பள்ளி நூலகங்களுக்கு ஆண்டு தோறும் வழங்கப்படுகிறது.

2009-2010 ஆம் ஆண்டில் அரசால் ரூ. 40.00 இலட்சம் தொகை அனுமதிக்கப்பட்டு 100 அரசு உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 100 அரசு மேல்நிலைப்பள்ளிகளுக்கு நூல்கள் வழங்கப்பட்டுள்ளன. 2010-2011 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**2.12. மேல்நிலைப் பள்ளிகளில் கணினி வசதியளித்தல்**

கணினி தொழில் நுட்பத்தில் தேர்ச்சி பெற்றவர்களை உருவாக்குவதற்காகக் கணினிக் கல்வித் திட்டத்தினை அரசு அறிமுகப்படுத்தி உள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1980 அரசு மேல்நிலைப்பள்ளிகளுக்கும் மற்றும் 2131 அரசு உயர்நிலைப்பள்ளிகளுக்கும் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. கணினி உதவியுடன் கற்றல் திட்டத்தின் கீழ் 6 முதல் 10ம் வகுப்பு முடிய உள்ள மாணவர்களுக்கு கணினி அறிவியல் பாடம் அறிமுகப்படுத்திடத் திட்டமிடப்பட்டு முதற்கட்டமாக 6 ஆம் வகுப்பிற்கு கணினி அறிவியல் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு 2009-10 ஆம் கல்வியாண்டில் அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள்

அனைவருக்கும் கணினி அறிவியல் பாடப் புத்தகம் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், கணினிக் கல்வி சார்ந்த பயிற்சி, அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் இடைநிலைப் பிரிவில் பணிபுரியும் (6 முதல் 10ம் வகுப்பு வரை) ஆசிரியர்கள், தலைமையாசிரியர்கள் அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. 2010-11ம் ஆண்டில் 7ஆம் வகுப்பிற்கு கணினி அறிவியல் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு, கணினி அறிவியல் பாடப்புத்தகம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**2.13. நடுநிலை பள்ளிகளை உயர்நிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்துதல்**

5 கிமீ சுற்றுவட்ட தூரத்தில் உயர்நிலைப்பள்ளி ஏதும் இல்லாத பட்சத்தில், நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துதல் அரசின் நீண்ட காலக் குறிக்கோளாகும். 2006-2007ஆம் ஆண்டு முதல் 2009 – 2010 ஆண்டு வரையில் மொத்தம் 445 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டன. மேலும் வரும் கல்வியாண்டில் 200 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாகத் தரம் உயர்த்தப் படும்.

**2.14. உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்துதல்**

2006-07ஆம் ஆண்டு முதல் 2009 – 2010 ஆண்டு வரையில் மொத்தம் 435 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டன. மேலும் வரும் கல்வியாண்டில் 125 அரசு உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும். மேலும் குறைந்த பயனடைந்த மற்றும் பயனடையாத இடங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு அந்த இடங்களில் மேல்நிலைப்பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

**2.15. பள்ளிக் கல்வித் துறையில் மின் ஆளுமை**

தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகம் பள்ளிக் கல்வித் துறைக்கென தனித்தன்மை வாய்ந்த இணையதளம் (www.pallikalvi.in) ஒன்றை உருவாக்கியுள்ளது. இந்த இணைய தளம் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பொது மக்கள் பயன்பெறும் வகையில் செயல்படுகிறது. பல்வேறு நிர்வாகச் செயல்பாடுகளுக்கான மென்பொருள் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. இம் மின்னணு நிர்வாகச் செயல்பாடு மூலம் பள்ளிக்கல்வித் துறையில் வெளிப்படையான மற்றும் துரிதமான நிர்வாகம் சாத்தியமாகும். இவ்விணையதளம் தொடங்கப்பட்டதால் பள்ளிகளுக்குத் தேவையான உதவிகளை மின்னணு வழி அன்பளிப்பாக பொது மற்றும் தனியார் பங்களிப்பு மூலம் பெற முடியும்.

**2.16. தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்தல்**

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழிப் பயிலும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்குப் பொதுத் தேர்வுக்கான தேர்வுக் கட்டணம் அரசால் விலக்களிக்கப்பட்டுள்ளது.

**2.17. சிறப்புக் கட்டணம் ரத்து**

2008-09ம் கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலன் கருதி முற்றிலும் இலவசக் கல்வி வழங்கிடும் வகையில் சிறப்புக் கட்டணம் ரத்து செய்யப்பட்டது. இக்கட்டணத்தினை அரசே ஏற்று ரூ.21.40 கோடியினை

பள்ளிகளுக்கு வழக்கமான செலவினங்களை மேற்கொள்ள திரும்ப அளித்துள்ளது. இதன் மூலம், 6044 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 48,27,903 மாணவ மாணவிகள் பயன்பெற்றுள்ளனர்.

### அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம்

குறிப்பிட்ட காலத்திற்குள் அனைத்துப் பள்ளி வயது (14-16) குழந்தைகளுக்கும் தரமான இடைநிலைக் கல்வி அளித்திட மத்திய மாநில அரசுகளின் பங்களிப்புடன் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் தொடங்கப் பட்டுள்ளது.

### 2.18. திட்டக் குறிக்கோள்கள்

- 2017ஆம் ஆண்டிற்குள் 9, 10 வகுப்பிற்குச் செல்லும் எல்லாக் குழந்தைகளுக்கும் இடைநிலைக் கல்வி வழங்குதல்.
- 2020ஆம் ஆண்டிற்குள் இடைநிலைக் கல்வியை முடித்த அனைவருக்கும் மேல்நிலைக் கல்வி வாய்ப்பை ஏற்படுத்துதல்.
- அனைத்து மாணவர்களுக்கும் தரமான கல்வியை உறுதி செய்தல்
- பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்.
- ஆண், பெண், இன, மத மற்றும் சமூக வேறுபாடின்றி இடைநிலைக் கல்வியை உறுதி செய்தல்

### 2.19. மேற்கொள்ளவிருக்கும் முனைவுகள்

நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்துவதுடன் ஏற்கனவே உள்ள பள்ளிகளை மேம்படுத்தும் வகையில் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு, குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, கணினி, ஆய்வகம், அறிவியல் ஆய்வக வசதிகள், கூடுதல் வகுப்பறைகள், கூடுதல் ஆசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள் நியமனம் ஆகியவை இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளது.

### 2.20. திட்ட மதிப்பீடு மற்றும் செலவினம்

2009-2010 ஆம் நிதி ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்களுக்கு மைய அரசு அனுமதித்துள்ளது:

- ஒரு பள்ளிக்கு ரூ.40,000 வீதம் 4,841 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு ரூ. 1936.40 இலட்சம் பள்ளி மானியம் (Annual School Grant).
- 200 புதிய உயர்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்த ஒரு பள்ளிக்கு ரூ. 58.12 இலட்சம் மானியம் வீதம் 11624.00 இலட்சம்.
- ஒரு பள்ளிக்கு 7 ஆசிரியர் பணியிடம் வீதம் 1,400 புதிய ஆசிரியர் பணியிடங்கள்
- 15,000 ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி (ஐட:ளுநசஎஉைந கூசயஉைேபே) அளித்திட ஒரு ஆசிரியருக்கு ரூ. 1000/- வீதம் 5 நாட்களுக்கான செலவினமாக ரூ. 150.00 இலட்சம்.
- பதினோராவது ஐந்தாண்டுத்திட்டக் காலத்தில் மைய, மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்திலும், பன்னிரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மைய மாநில அரசுகள் 50:50 என்ற விகிதத்திலும் நிதி ஒதுக்கீடு அமையும்

### 2.21. மாதிரிப் பள்ளிகள்

அனைத்து மாணவர்களுக்கும் இடைநிலைக் கல்வியை தரமானதாகவும், அவர்களது இருப்பிடத்திற்கு அருகிலேயே கிடைக்குமாறும் வழிவகை செய்ய மத்திய அரசு முனைப்புடன்

உள்ளது. இவ்வகையில் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் பிறிதொரு பகுதியாக கிராமப்புற அறிவு திறன் மிக்க மாணவர்களுக்காக மேம்பட்ட வசதியுடன் கூடிய மாதிரிப்பள்ளிகளை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளது.

தமிழகத்தில் கல்வியில் பின்தங்கிய 44 வட்டாரங்களில் 13 மாவட்டங்களில் மாதிரிப் பள்ளிகள் தொடங்க ஒப்புதலளிக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு பள்ளிக்கும் தொடரா செலவினமாக ரூ.3.00 கோடியும், தொடரும் செலவினமாக ரூ. 75.00 இலட்சமும் மேற்கொள்ளப்பட உள்ளது. முதற்கட்டமாக 18 மாதிரிப் பள்ளிகள் 2009-10 கல்வியாண்டில் கடலூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, சேலம், விழுப்புரம், கரூர், நாமக்கல், திருப்பூர் மற்றும் சிவகங்கை ஆகிய 10 மாவட்டங்களில் துவங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**2.22. மாணவியர் விடுதிகள்**

கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களில் கிராமப்புற மாணவியர்கள் இடைநிலைக் கல்வியைத் தொடர்ந்து படிக்க வழி வகை செய்ய ஏற்பாடு செய்துள்ள திட்டமே மாணவியர்கள் விடுதிகள் திட்டமாகும். முதற்கட்டமாக 44 மாணவியர் தங்கும் விடுதிகள், உண்டு உறைவிட வசதிகளுடன் கல்வியில் பின்தங்கிய வட்டாரங்களில் தொடங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

14 முதல் 18 வயதிற்குட்பட்ட தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர் மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பத்தைச் சார்ந்த 9 மற்றும் 10ம் வகுப்பு மாணவியர் பயன்பெறும் வண்ணம் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

நடப்பு ஆண்டில் 44 மாணவியர் விடுதிகள் துவங்கப்பட உள்ளன. கடலூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, திருப்பூர், கரூர் நாமக்கல், சேலம், சிவகங்கை, விழுப்புரம், பெரம்பலூர், திருவண்ணாமலை மற்றும் அரியலூர் ஆகிய மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மேற்பார்வையின் கீழ் இத்திட்டம் செயல்பட உள்ளது.

ஒவ்வொரு விடுதிக்கும் தொடரா செலவினமாக ரூ.42.50 இலட்சமும், தொடரும் செலவினமாக ஆண்டு ஒன்றிற்கு ரூ.14.27 இலட்சமும் செலவிடப்படும்.

**2.23. பெண்களுக்கான தேசிய இடைநிலைக் கல்வி ஊக்குவிப்புத் திட்டம்**

மைய அரசின் தேசியப் பெண்கல்வி ஊக்குவிப்பு இடைநிலைக்கல்வித் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பைச் சேர்ந்த மாணவிகள் பள்ளியிலிருந்து இடைநிற்றலைத் தவிர்க்கும் பொருட்டு எட்டாம் வகுப்புத் தேர்வு பெற்று ஒன்பதாம் வகுப்பில் பயிலும் 16 வயதுக்குட்பட்ட திருமணமாகாத மாணவியருக்கு ஒவ்வொருவருக்கும் தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் ரூ. 3000/- வைப்பீடு செய்யப்படும். இவ்வாண்டு, 1,21,292 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இன மாணவியர் இத்திட்டத்தின் கீழ் பயனடைவர்.

**2.24. சமச்சீர் கல்வி**

மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் மாநில வாரியப் பள்ளிகள், மெட்ரிக்குலேசன் பள்ளிகள், ஓரியண்டல் பள்ளிகள், ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள் ஆகிய நான்கு வகையான பள்ளிக்கல்வி முறைகள் தற்போது செயல்பட்டு வருகின்றன. இந்தப் பள்ளிகள் தனிப்பட்ட பாடத்திட்டங்களையும், பாட நூல்களையும் தேர்வுத் திட்டங்களையும் கொண்டிருக்கின்றன. மேலும், அவை வேறுபட்ட வாரியங்களின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. அதன் விளைவாக, இந்தப் பள்ளிகளில் உள்ள கல்வியின் தரமானது சமச்சீரான முறையில் இல்லை. சமூக நீதியை

உறுதி செய்து, இம்மாநிலத்திலுள்ள பள்ளிகளில் தரமான கல்வியை வழங்குவதற்கு, பள்ளிக்கல்வியில் சமச்சீரான முறையை உருவாக்குவது இன்றியமையாததாக உள்ளது. எனவே அரசு 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக்கல்வி முறைச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் எண்.8/2010) இயற்றியுள்ளது. அதன்படி, மாநிலப் பொதுப் பள்ளிக் கல்வி வாரியம் அமைக்கப்பட்டு அதன் ஒப்புதலுடன் வகுக்கப்பட்டுள்ள பொதுப் பாடத்திட்டம் வரும் கல்வியாண்டில் ஒன்று மற்றும் ஆறாம் வகுப்புகளுக்கு அறிமுகப்படுத்தப்படும். அடுத்து வரும் கல்வியாண்டில் மற்ற வகுப்புகளுக்கும் பொதுப் பாடத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

**2.25. மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வி**

தமிழக அரசு கணினி கல்வியினைப் பள்ளிகளில் மேம்படுத்தவும், மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்பத் திறன்களை வளர்த்திடவும் உறுதி பூண்டுள்ளது. மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வியை முன்னேற்றமடையச் செய்யும் பொருட்டு தேவையான கல்வித் தகுதியுடன் கூடிய 1686 கணினி பயிற்றுநர்களை 2008-2009 ஆம் கல்வியாண்டில் நியமனம் செய்துள்ளது. 2010-11 ஆம் கல்வியாண்டில் எஞ்சியுள்ள கணினி பயிற்றுநர் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும்.

வேளாண்மை பயிலும் மாணவர்களுக்குக் காலத்தின் தேவைக்கேற்ப புதிய மற்றும் புதுமையான வேளாண்மை முறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த 200 வேளாண்மை ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

உயர்மட்டக்குழு அறிக்கையின் அடிப்படையில் மேல்நிலைப்பள்ளிகளில், தொழிற் கல்வியினை நடைமுறைப் படுத்துவது சார்ந்து தற்போதைய தேவைக்கேற்பத் தொழிற் கல்வியினை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2010-2011 ஆம் ஆண்டு முதல் 9 முக்கிய பாடங்கள் கொண்டவையாகத் தொழிற்கல்வி இருக்கும்.

**2.26. நாட்டு நலப்பணித்திட்டம்**

நாட்டு நலப்பணித் திட்டத்தின் முக்கிய குறிக்கோள், மாணவர்கள் பள்ளியில் படிக்கும் நிலையிலேயே அவர்களுக்கு ஆளுமைத் திறனையும், நாட்டுப் பற்றையும், தன்னம்பிக்கையையும் வளர்த்துக் கொள்ளுதல் சமூக சேவையாக மருத்துவ முகாம்களை நடத்துதல், இரத்த தானம் முகாம்களில் உதவிபுரிதல், விழிப்புணர்வு முகாம் நடத்துதல் மற்றும் நலத் திட்டங்கள் பற்றி மக்களுக்கு எடுத்துரைத்தல் ஆகியவை ஆகும்.

இத்திட்டத்திற்கு மைய அரசும் மாநில அரசும் முறையே 7:5 என்ற விகிதத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. 2009-10 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.300.70 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது 1940 மேல்நிலைப் பள்ளிகளில் 97,000 துடிப்பான மாணவத் தொண்டர்களுடன் இத்திட்டம் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தைத் தொடர்ந்திடவும் அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் இதனைத் தொடங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**2.27. சாரண மற்றும் சாரணியர் இயக்கம்**

சாரண, சாரணியர் இயக்கம் தமிழ் நாட்டில் 5855 பள்ளிகளில் செயல்பட்டு வருகிறது. இவ்வியக்கத்தில் தற்பொழுது 1,18,100 மாணவர்களும், 60,050 மாணவியர்களும் சாரண, சாரணியர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். கோயில் வளாகத்தைச் சுத்தப்படுத்துதல், மரம் வளர்த்தல்,

போக்குவரத்தைக் கட்டுப்படுத்துதல் மற்றும் முதலுதவி செய்தல் ஆகிய சமூக சேவையில் தங்களைத் தாங்களே ஈடுபடுத்திக் கொள்ள இவ்வியக்கம் வகை செய்கிறது. 1998-99 முதல் சாரண, சாரணியர் இயக்கத்தில் சிறந்த சேவை புரிபவர்களுக்கு "இராஜ்யபுரஸ்கார்" விருது வழங்கப்படுகிறது. இவ்விருதிற்கு 2009-10 ஆம் ஆண்டில் ரூ.5.00 இலட்சம் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.28. இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்**

தமிழ் நாட்டில் செஞ்சிலுவைச் சங்கம் பல பள்ளிகளில் செயல்பட்டு வருகின்றது. மாவட்ட ஆட்சியரே இளைஞர் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் ஆவார். இவ்வியக்கத்தில் மாணவர்கள் தொண்டர்களாகவும், ஆசிரியர்கள் பயிற்றுநர்களாகவும் உள்ளனர். தமிழ் நாட்டில் இவ்வியக்கம் 5,477 உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் செயல்பட்டு வருகிறது. வரும் 2010-2011 ஆம் ஆண்டிலும் அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் இவ்வியக்கத்தை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**2.29. விளையாட்டு மற்றும் யோகா பயிற்சிகள்**

அனைத்துப் பள்ளிகளிலும் 6,7,8 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களின் சிறப்புத் திறமைகளை அறியும் பொருட்டு ஐந்து தொடர் தேர்வுகள் நடத்தும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், இத்திட்டத்தின் மூலம் தேசிய மற்றும் சர்வதேச அளவில் பங்கேற்கும் திறமை வாய்ந்த மாணவர்களைக் கண்டறிகிறது.

2009 டிசம்பர் 5 தேதி முதல் 7 தேதி முடிய மாநில அளவில் நாமக்கல்லில் விழா நடத்தப்பட்டது. டிசம்பர் 11 முதல் 13 முடிய குடியரசு தின விளையாட்டுக்கள் திண்டுக்கல்லிலும், 2010, ஜனவரி 10 முதல் 12 வரை குடியரசு தின விளையாட்டுக்கள் ஈரோட்டிலும், நடத்தப்பட்டு வெற்றிபெற்ற அனைவருக்கும் பதக்கமும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலமாக தேர்ச்சி பெற்றோர்க்கு பரிசுத் தொகையாக ரூ. 600/- மற்றும் ரூ. 400/- வழங்கப்பட்டன.

உடற் கல்விக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட இரண்டு பாடவேளைகளில் ஒரு பாட வேளையை முழுமையாக யோகா பயிற்சிக்கென ஒதுக்கி 2008-09 ஆம் ஆண்டில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. யோகா பயிற்சி பெற்ற உடற் கல்வி ஆசிரியர்களைக் கொண்டு உடற்கல்விப் பாடத்துடன் யோகா பயிற்சியும் மாணவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

**2.30. டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது**

ஆண்டுதோறும் மாநிலத்தில் சிறந்த முறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருது 1960 முதல் வழங்கப்பட்டு வருகிறது. இது 1997 முதல் மேனாள் இந்திய குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதாக ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 5ஆம் தேதி வழங்கப்பட்டு வருகிறது.

2009-10 ஆம் ஆண்டில் 354 ஆசிரியர்கட்கு விருதுத் தொகையாக ரூ.5000/- மற்றும் வெள்ளிப்பதக்கமும் நற்சான்றிதழும் வழங்கப்பட்டன.

**2.31. தேசிய விருது**

மைய அரசின் மூலம் நாடு முழுவதும் பணியாற்றும் சிறந்த ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு தேசிய விருது வழங்கப்பட்டு வருகிறது. ஆரம்ப, இடைநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் 22 ஆசிரியர்கள் மற்றும் 3 சிறப்பு

ஆசிரியர்களும் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களால் புது தில்லியில் செப்டம்பர் 5 ஆம் நாள் விருது வழங்கப்படுகிறது.

இவ்விருது பெறும் ஆசிரியர்களுக்கு ரூ.25,000/- ரொக்கமும், வெள்ளிப் பதக்கமும், நற்சான்றிதழும் வழங்கப்படுகிறது. மேலும் இவர்கள் விருது பெற செல்லும் பயணச் செலவும் வழங்கப்படுகிறது.

2.32. விடுமுறையுடன் கூடிய பயணச் சலுகை

இந்திய அரசின் சார்பாக மாநில, தேசிய விருது பெற்ற ஆசிரியர்களுக்கு குடும்பத்துடன் அவர்கள் இந்தியாவின் எப்பகுதியையும் கண்டு களிக்க ஐந்தாண்டுகட்கு ஒரு முறை 14 நாட்களுக்கு தொடர் வண்டியில் 3 படுக்கை வசதி கொண்ட, குளிர்சாதனப் பெட்டியில் பயணம் செய்ய உதவித் தொகை வழங்கப்படுகிறது. நாள் ஒன்றுக்கு தினப்படியாக ரூ.200/-ம் வழங்கப்படுகிறது.

2.33. தேசிய ஆசிரியர் நல நிறுவனம்

தேசிய ஆசிரியர் நல நிறுவனம் 1962-ல் நிறுவப்பபட்டது. இந்நிறுவனம் மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்களை அலுவல் வழித் தலைவராகவும், பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களை அலுவல் வழிச் செயலாளராகவும் கொண்டு பள்ளிக் கல்வி இயக்குநரின் மேற்பார்வையில் இயங்கிவருகிறது. ஆசிரியர் தினக் கொடி விற்பனை நிதியைப் பயன்படுத்தி பல்வேறு ஆசிரியர் நலத் திட்டங்கள் இதன் மூலம் செயல்படுத்தப் படுகின்றன.

2.34. ஆசிரியர்களுக்கான மருத்துவ உதவி

இத்திட்டத்தின் கீழ் ஆசிரியரோ அல்லது அவரது குடும்பத்தைச் சார்ந்தோர் உடல் நலிவுற்று மருத்துவ மனையில் சேர்ந்து உடல் நலம் பேணும் செலவிற்கு ரூ.50,000/- அல்லது மருத்துவச் செலவில் 75% ஆகியவற்றில் எது குறைவோ அந்தத் தொகை வழங்கப்படுகிறது.

2.35. கல்வி உதவித் தொகை

ஆசிரியரின் குழந்தைகள் மருத்துவம்/தொழிற்கல்வி பயின்றால் அக்குழந்தைகளுக்கு, கல்வி உதவி நிதியாக முறையே ஆண்டுக்கு ரூ.5,000/- மற்றும் ரூ.2,500/- வழங்கப் படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ரூ.87.55 இலட்சம் செலவில் 1,813 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

2.36. சாதி / இருப்பிட / வருவாய்ச் சான்றிதழ் வழங்கல்

பள்ளியில் பயிலும் 10, 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சாதி, இருப்பிட வருவாய்ச் சான்றிதழ் வழங்குவதற்காக, தலைமையாசிரியர்கள் மாணவர்களிடம் விண்ணப்பங்களைப் பெற்று வருவாய்த்துறையினரிடம் வழங்கி மேற்கண்ட சான்றிதழ்களைப் பெற வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது. மேற்படி விண்ணப்பம் அளித்த மாணவர்கள் பள்ளியில் 10 மற்றும் 12 வகுப்புகள் முடித்துச் செல்லும்போது இச்சான்றுகள் வழங்கப்படுகின்றன.

2.37. முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு பரிசுத் தொகை

திறமை மிக்க மாணவர்கள் தங்கள் மேற்படிப்பைத் தொடர ஊக்குவிக்கும் பொருட்டு அரசு இத்திட்டத்தைக் கொணர்ந்தது. இத்திட்டத்தின்படி மாநில அளவில் தமிழை முதல் மொழிப்பாடமாகப் படித்து மேல்நிலைப் பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்குப் பரிசுத்தொகை பின்வருமாறு அளிக்கப்படுகிறது:

| | | |
|---|---|---|
| 1. | முதலிடம் | ரூ. 50,000/- |
| 2. | இரண்டாமிடம் | ரூ. 30,000/- |
| 3. | மூன்றாமிடம் | ரூ. 20,000/- |

மேலும், மாவட்ட அளவில் மேல்நிலைத் தேர்வில் முதலிடம் பெறும் பின்வரும் பள்ளி மாணவர்களுக்கு மேற்கல்விக்கான செலவை அரசே ஏற்கிறது:

| | | |
|---|---|---|
| 1. | அரசு மேல்நிலைப்பள்ளி | – 1 |
| 2. | நிதியுதவி பெறும் மேல்நிலைப்பள்ளி | - 1 |
| 3. | ஆங்கிலோ இந்தியன், மெட்ரிகுலேசன் மற்றும் சுயநிதி மேல்நிலைப்பள்ளி | - 1 |

அதே போன்று, மாநில அளவில் தமிழை முதல் மொழிப்பாடமாக படித்து முதல் மூன்று இடங்களைப் பெறும் இடைநிலைப் பொதுத் தேர்வு (SSLC) மாணவர்களுக்குப் பின்வருமாறு பரிசுத் தொகை வழங்கப்படுகிறது:

| | | |
|---|---|---|
| 1. | முதலிடம் | ரூ.25,000/- |
| 2. | இரண்டாமிடம் | ரூ.20,000/- |
| 3. | மூன்றாமிடம் | ரூ.15,000/- |

இது தவிர 10ஆம் வகுப்பு தேர்வில் மாவட்ட அளவில் முதலிடம் பெறும் பின்வரும் பள்ளி மாணவர்களுக்கு மேற்கல்விக்கானச் செலவினமாக ரூ. 1,500/- வழங்கப்பட்டு வருகிறது:

| | |
|---|---|
| 1. அரசு உயர்நிலைப்பள்ளி | -1 |
| 2. நிதியுதவி பெறும் உயர்நிலைப்பள்ளி | -1 |
| 3.ஆங்கிலோ இந்தியன், மெட்ரிகுலேசன் மற்றும் சுயநதி உயர்நிலைப்பள்ளி ஆகிய மூன்றும் சேர்ந்து | -1 |

இது தவிர, மேல்நிலைத் தேர்வில் மாநில அளவில் முதல் 3 இடங்களைப் பெறும் மாணவர்களின் மேற்கல்விக்கான முழுச் செலவையும் மாநில அரசே ஏற்கிறது.

தவிர, பாடவாரியாக இடைநிலை மற்றும் மேனிலைப் பொதுத் தேர்வில் மாநிலத்தில் முதலிடம் பெறும் 10 மற்றும் 12 ம் வகுப்பு மாணவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் அரசு நிர்ணயிக்கும் விகிதத்தில் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

**2.38. இளைஞர் திறன் வளர்த்தல் திட்டம்**

இத்திட்டத்தின் மூலம் மாணவர்களிடம் மறைந்திருக்கும் திறமைகள் வெளிக் கொணரப்படுகின்றன. பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, ஓவியம் வரைதல், வினாடிவினா, இசை, கவிதை எழுதுதல், பரத நாட்டியம், கிராமிய நடனம், இசைக் கருவிகள் இசைத்தல் போன்ற பல போட்டிகள் நடத்தப்படுகின்றன.

ஒவ்வோராண்டும் பள்ளி அளவிலும், கல்வி மாவட்ட அளவிலும், வருவாய் மாவட்ட அளவிலும், போட்டிகள் நடத்தப்பட்டு, பின் இறுதியாக மாநில அளவிலும் நடத்தப்படுகின்றன.

**2.39. அறிவியல் கண்காட்சி**

2009-10 ஆம் ஆண்டில் விழுப்புரத்தில் சிறப்பான முறையில் அறிவியல் கண்காட்சி நடத்தப்பட்டது. மாநில அளவில் அறிவியல் கண்காட்சிகள் நடத்தப்படும் முன்பாக முதற்கட்டமாக பள்ளி அளவிலும், கல்வி மாவட்ட அளவிலும் மற்றும் வருவாய் மாவட்ட அளவிலும் இக்கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. தென்னிந்தியாவிலுள்ள ஆந்திரா, கேரளா, கர்நாடகம், தமிழகம், மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களில்அறிவியல் கண்காட்சி, ஆண்டிற்கு ஒருமுறை சுழற்சி

முறையில், பெங்களூர் ஸ்ரீவிஸ்வேஸ்வரய்யா அறிவியல் தொழில்நுட்ப அருங்காட்சியகம், உதவியுடன் நடைபெற்று வருகிறது.

### 2.40. பெற்றோர் உதவியிழந்த மாணவர்களுக்கான துயர்துடைப்பு நிதியுதவி

விபத்தில் பெற்றோரை இழந்த மாணவர்கள், விபத்தின் காரணமாக உழைக்க இயலாத பெற்றோர்களின் மாணவர்கள் ஆகியோர்களுக்கு ரூ.50,000 வீதம் இவ்வுதவித்தொகை வழங்கப்படுகிறது. 2009-10 ஆம் ஆண்டு அரசால் ரூ.175.00 இலட்சம் நிதி ஒதுக்கீடுச் செய்யப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 2009-10ஆம் ஆண்டில் 350 மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர். 2006-07ஆம் ஆண்டு முதல் இதுவரை 700 மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்றுள்ளனர்.

### 2.41. தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டம் - 2006

இத்திட்டத்தின் கீழ் இடைநிலை மற்றும் மேனிலை பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற விவசாயத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு பின்வரும் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

| | மாணவர் | மாணவியர் |
|---|---|---|
| இடைநிலைக் கல்வி பொதுத் தேர்வு | ரூ. 1250/- | ரூ.1500/- |
| மேல்நிலைக் கல்வி பொதுத் தேர்வு | ரூ.1750/- | ரூ. 2000/- |

இத்திட்டத்தின் கீழ் 10 ஆம் வகுப்பில் 26,114 மாணவர்களும் மற்றும் 22,291 மாணவிகளும், மற்றும் பன்னிரண்டாம் வகுப்பில் 3,894 மாணவர்களும், 3,842 மாணவியரும் பயன்பெற்றுள்ளனர்.

### 2.42. நபார்டு வங்கி - நிதியுதவித் திட்டம்

நபார்டு வங்கி நிதி உதவித் திட்டத்தின் கீழ், உயர்நிலை/ மேல்நிலை பள்ளிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் அதாவது வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள், கழிவறைகள், குடிநீர் வசதி, மின் வசதி மற்றும் சுற்றுச் சுவர் அமைத்து தரப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள அரசு பள்ளிகளில் நபார்டு வங்கி உதவியுடன் பள்ளி உட்கட்டமைப்பு மேம்படுத்த மேற்கொண்ட திட்டங்கள் அனைத்தும் பள்ளிக் கல்வித் தரத்தினை உயர்த்தி சிறப்படையச் செய்துள்ளன.

1 முதல் 9 கட்டங்களில் 2004 பள்ளிகளுக்கு ரூ.1181.97 கோடி மதிப்பீட்டில் மேற்குறிப்பிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைக்க அரசு ஆணையிட்டு, அப்பணிகள் அனைத்தும் முடியும் தருவாயில் உள்ளன.

தற்போது 2009-10 ஆம் ஆண்டில் நபார்டு திட்டம் 10 வது கட்டத்தில் 303 பள்ளிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளான வகுப்பறைகள், ஆய்வுக்கூடம் , குடிநீர் வசதி, கழிவறைகள், சுற்றுச்சுவர், ஆய்வக உபகரணங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் ஆகிய வசதிகளை ரூ.247.06 கோடி செலவில் செய்து தர அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

புதிய வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள், கழிவறை வசதிகள், குடிநீர் வசதிகள், சுற்றுச்சுவர் ஆகிய வசதிகள் அளிக்கப்படுவதின் மூலம் பள்ளிச்சூழல் புதுப்பிக்கப்பட்டு சிறப்படைந்துள்ளது. பள்ளிக்கல்வி வளர்ச்சியில் நபார்டு வங்கியின் பங்கு சிறப்புடையதென பள்ளிக் கல்வித் துறை மதிப்பிடுகிறது.

### 2.43. நபார்டு வங்கி உதவியுடன் பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வக உபகரணங்கள் வழங்குதல்

நபார்டு திட்டத்தின் உதவியுடன் அறிவியல் ஆய்வக உபகரணங்கள் வாங்குவதற்காக ரூ.875.00 இலட்சம் ஒதுக்கப் பட்டது. இதன்மூலம் 2008-09ஆம் ஆண்டில் 619 உயர்நிலைப் பள்ளி, 547 மேல்நிலைப் பள்ளிகளில் இத்திட்டம் 1 முதல் 8 கட்டங்களாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள தொகை முழுவதும் பயன்படுத்தப்பட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மேலும், 9 மற்றும் 10வது கட்டங்களின் கீழ் 206 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 190 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வக உபகரணங்கள் வழங்கப் படுவதற்காக அரசால் ரூ.295.00 இலட்சம் அனுமதிக்கப் பட்டுள்ளது.

### 2.44. நபார்டு உதவியுடன் பள்ளிகளுக்கு இருக்கை வசதிகள் ஏற்படுத்துதல்

நபார்டு திட்டம் 1 முதல் 7 வரையுள்ள கட்டங்களின் கீழ் 1,530 அரசு உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறைகளுக்கு ஆசிரியர்களுக்கான மேசை மற்றும் நாற்காலிகள் மற்றும் மாணவர்களுக்கான பெஞ்ச் மற்றும் சாய்வுமேசை ஆகியன வழங்கப்படுவதற்காக அரசால் ரூ. 6908.00 இலட்சம் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன்மூலம் 1,90,140 பெஞ்ச் மற்றும் டெஸ்க்குகள் மற்றும் 15,845 நாற்காலி மற்றும் மேஜைகள் வழங்கப்பட்டன.

மேலும் நபார்டு திட்டம் கட்டம் 8 மற்றும் 9ன் கீழ் 420 பள்ளிகளில் கட்டப்படவுள்ள கூடுதல் வகுப்பறைகளுக்கு இருக்கை வசதிகள் ஏற்படுத்திட ரூ.2720.09 இலட்சம் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மூலமாக ஆசிரியர்களுக்கு 5425 மேசை, நாற்காலிகளும், மாணவர்களுக்கு 65100 பெஞ்ச் மற்றும் டெஸ்க்குகளும் வழங்கப்பட உள்ளது.

மேலும், நபார்டு திட்டம் கட்டம் 10-ன்கீழ் கட்டப்படவுள்ள கூடுதல் வகுப்பறைகளுக்கு ரூ.1038.08 இலட்சம் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மூலமாக ஆசிரியர்களுக்கு 1,886 மேஜை மற்றும் நாற்காலிகளும், மாணவர்களுக்கு 22,632 பெஞ்ச் மற்றும் சாய்வுமேசைகள் வழங்கப்படவுள்ளது.

### 2.45. பெற்றோர் ஆசிரியர் கழகம்

பள்ளி வயதில் உள்ள அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்ப்பது, பள்ளியில் சேர்ந்தோர் படிப்பைக் கைவிடாமல் தொடர்ந்து பள்ளியிலேயே படிக்கச் செய்தல் மற்றும் கல்வியின் தரத்தை மேம்படுத்துதல் போன்றவை இக்கழகத்தின் முக்கிய நோக்கமாகும்.

10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் 1997ஆம் ஆண்டு முதல் வினா வங்கி ஏடுகள் மற்றும் வழிகாட்டு நூல்கள் (Question Bank and Guides) வெளியிடப்பட்டு வருகிறது. மார்ச் / ஏப்ரல் பொதுத் தேர்வுகளில் 100 சதவீதம் தேர்ச்சி காட்டிய உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்குப் பரிசுத் தொகையாக ரூ. 2000/- வழங்கி பெருமைப்படுத்துகிறது. அண்ணா நூற்றாண்டு விழாவையொட்டி மாவட்ட மற்றும் மாநில அளவில் பள்ளி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டிகள் நடத்தி பரிசுத் தொகையாக ரூ. 1,87,000/- வழங்கியுள்ளது.

## 2.46. பள்ளிச் சீரமைப்புத் திட்டம்

பள்ளிக் கல்வித் துறையை ஊக்குவிக்கும் வகையில் மாநில அரசு, அரசு பள்ளிகளில் உள்ள அடிப்படை வசதிகளைப் பொது நிறுவனங்கள் மற்றும் புரவலர்கள் பங்களிப்பின் மூலம் மேம்படுத்தி நடத்திட ஆணை வழங்கியுள்ளது. இத்திட்டம், பள்ளிகளுக்குத் தேவைப்படும், குறிப்பிட்ட தேவைகளைத் தாங்களே வழங்கிடவோ அல்லது நன்கொடைகள் மூலமாகவோ, 5 முதல் 7 வருடங்களுக்கு செயல்படுத்திட புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding) மூலம் நிறைவேற்றப்படுகிறது.

## 2.47. "சுற்றுச்சூழல்" மன்றம்

"சுற்றுச்சூழல்" குறித்த கல்வியறிவிற்கான வாய்ப்புகளை மாணவர்களுக்கு அளித்து அதன் வாயிலாகச் சுற்றுச்சூழல் குறித்த சமுதாய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதே இம்மன்றத்தின் நோக்கமாகும்.

அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ.1,250/- வீதம் தமிழ்நாடு அரசிடமிருந்து நிதி உதவி பெறப்பட்டு சுற்றுச்சூழல் மன்றம் செயல்பட்டு வரும் 1,200 பள்ளிகளுக்கு சுற்றுச் சூழல் மற்றும் வனப்பாதுகாப்பு துறையின் மூலம் நிதி உதவி வழங்கப்படுகிறது.

மேலும், ஒரு பள்ளிக்கு ரூ.2,500/-வீதம் மைய அரசிடமிருந்து நிதி உதவி பெறப்பட்டு, தேசீயப் பசுமைப்படை மன்றம் செயல்பட்டு வரும் 7,500 பள்ளிகளுக்குச் சுற்றுச்சூழல் மற்றும் வனப்பாதுகாப்பு துறையின் மூலம் நிதி உதவி வழங்கப்படுகிறது.

பள்ளிகளில் மரம் நடுதல், தோட்டக்கலை வளர்த்தல் போன்ற பணிகள் இயற்கை ஆர்வலராக விளங்கும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களைக் கொண்டு சுற்றுச்சூழல் மன்றமும், தேசீயப் பசுமைப்படை மன்றமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் செயல்பாட்டிற்காக மாவட்ட அளவில் ஒரு ஒருங்கிணைப்பாளர் மற்றும் மாநில அளவில் ஒரு உதவி இயக்குநர் (சுற்றுச்சூழல்) பணியிடமும் ஏற்படுத்தப்பட்டு முறையே முதுகலை பாட ஆசிரியர் (தாவரவியல்/உயிரியல்) மற்றம் மாவட்டக் கல்வி அலுவலர் நிலையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

## 3. மெட்ரிகுலேஷன் பள்ளிகள்

மெட்ரிகுலேஷன் பள்ளிகள், ஆங்கில வழியில் சுயநிதி அடிப்படையில் இயங்கும் பள்ளிகளாகும். இப்பள்ளிகள் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்ககத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிகள் மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கான ஒழுங்குபடுத்தும் விதிகளால் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்ககத்தின் கீழ் 3,655 மெட்ரிகுலேஷன் பள்ளிகள் மற்றும் 15 மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஆய்வாளர் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

### 3.1. தமிழ்நாடு தமிழ் கற்கும் சட்டம் 2006

தமிழ்நாடு தமிழ் கற்கும் சட்டம் 2006 சட்டப்பிரிவு எண். 3(1)—ன்படி தமிழ் பாடம் கட்டாய மொழிப் பாடமாக 2006-2007 கல்வியாண்டு முதல் ஒன்றாம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை படிப்படியாக பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது.

### 3.2. இலவச தமிழ் பாடநூல்கள்

மெட்ரிகுலேஷன்/ மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்புகள் வரை பயிலும் மாணவர்களுக்கு 2007-2008 ஆண்டு முதல் இலவச தமிழ்பாட நூல்கள் வழங்கப்படுகின்றன. 2009-2010ஆம் ஆண்டில் ரூ.2.61 கோடி செலவில், 20,38,845 மாணவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

### 3.3. இட வசதிகள் ஏற்படுத்த கால நீட்டிப்பு

மெட்ரிகுலேஷன்/ மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளிகளில் அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச இட வசதி ஏற்படுத்த அளிக்கப்பட்ட கால அவகாசமான மூன்று முதல் நான்கு ஆண்டுகள் முடிவடைந்து விட்டதால் பள்ளி நிர்வாகங்களின் கோரிக்கையின் பேரில் குறைந்தபட்ச இட வசதி ஏற்படுத்த மேலும் 3 ஆண்டுகள் கால அவகாசம் அளித்து அரசு ஆணையிட்டுள்ளது.

### 3.4. எல்.கே.ஜி/ யூ.கே.ஜி வகுப்புகள் துவங்க அனுமதி / அங்கீகாரம்

மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கான ஒழுங்குபடுத்தும் விதித் தொகுப்பு விதிகளின்படி 1 முதல் 12 வகுப்புகளுக்கு மட்டுமே பள்ளிகள் துவங்க அனுமதி/ அங்கீகாரம் வழங்கப்பட்டு வந்தது. பெரும்பாலான மெட்ரிகுலேஷன்/ மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளிகளில் எல்.கே.ஜி வகுப்பு முதல் மாணவர்கள் சேர்க்கை செய்யப்பட்டு கல்வி பயின்று வருவதால் எல்.கே.ஜி மற்றும் யூ.கே.ஜி வகுப்புகளையும் ஒன்றிணைத்து எல்.கே.ஜி மற்றும் யூ.கே.ஜி வகுப்புகள் துவங்க அனுமதி/ அங்கீகாரம் வழங்குவது குறித்த வரையறைகளை நிர்ணயம் செய்து அரசு ஆணையிட்டுள்ளது. மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கான ஒழுங்குபடுத்தும் விதித் தொகுப்பிலும் எல்.கே.ஜி மற்றும் யூ.கே.ஜி வகுப்புகளை உள்ளடக்கி தமிழ்நாடு மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் விதித் தொகுப்புக்கு உரிய திருத்தம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

### 3.5. மெட்ரிக் பொதுத் தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு பரிசு தொகை வழங்குதல்

2008-2009 கல்வியாண்டு முதல் மெட்ரிகுலேஷன் பள்ளிகள்/மெட்ரிகுலேசன் மேல்நிலை பள்ளிகளில் பத்தாம் வகுப்பு (மெட்ரிக்) பொது தேர்வில் மாநில அளவில் தமிழை முதல்

மொழிப்பாடமாகப் படித்து முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு கீழ்க்கண்டவாறு பரிசுத் தொகை வழங்கப்படுகிறது:

| | | |
|---|---|---|
| முதல் நிலை | - | ரூ. 25,000/- |
| இரண்டாம் நிலை | - | ரூ. 20,000/- |
| மூன்றாம் நிலை | - | ரூ. 15,000/- |

### 3.6. அங்கீகாரம் வழங்கும் உயர் மட்டக்குழு

தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கும் நடைமுறையினை எளிதாக்கும் விதமாக திரு.எம்.பி.விஜயகுமார் இ.ஆ.ப.(ஓய்வு) அவர்கள் தலைமையில் ஒரு உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டது. அக்குழுவின் அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.

### 3.7. தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டம், 2009

பள்ளிகளில் கட்டணம் வசூலிப்பதை முறைப் படுத்துவதற்கு தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டம், 2009 இயற்றப்பட்டு , இச்சட்டம் 07.12.2009 முதல் அமல் படுத்தப்பட்டுள்ளது. இதற்கான சட்ட விதிகளும் அமலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இச் சட்டத்தின்படி சுயநிதி அடிப்படையில் இயங்கும் பள்ளிகளில் கட்டணம் நிர்ணயம் செய்வதற்காக நீதியரசர் திரு.கே.கோவிந்தராஜன் (ஓய்வு) அவர்களைத் தலைவராகக் கொண்டு குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு அமைக்கப்பட்டதிலிருந்து இதுவரை 12 முறை கூடியுள்ளது. பள்ளிகள் துவக்கப்படுவதற்கு முன்னர் கட்டண நிர்ணயம் சார்ந்து உரிய ஆணைகள் குழுவால் அளிக்கப்பட்டுவிடும்.

## 4. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

தரமான ஆசிரியர்களை உருவாக்குவதும் மற்றும் அவர்கள் பணியில் சேர்ந்தபின் நவீன கற்பித்தல் முறைக்கேற்ப பணியிடைப் பயிற்சி வழங்கி கற்பிக்கும் திறனை மேம்படுத்துவதும் இவ்வியக்ககத்தின் நோக்கமாகும்.

### 4.1. தொலை நோக்கு

- ❖ அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களும் மாவட்ட வள மையங்களாக, அனைத்து ஆசிரியர்கள், வட்டார வள மைய ஆசிரியப் பயிற்றுநர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் கல்வியில் ஆர்வலர்களின் கல்வித் தேவைகளை அறிந்து பயிற்சி அளிக்கும் மையங்களாகச் செயல்படுதல்.
- ❖ கல்வியின் புதிய கண்டுபிடிப்புகளையும், ஆய்வுகளையும் பகிர்ந்து கொள்ளும் தளங்களாக மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்கள் உருவாதல்.
- ❖ இன்றியமையாத கல்வி ஆராய்ச்சிகளின் முடிவுகளைத் தொகுத்து பயன்பெறும் வகையில் அவற்றைப் பரவலாக்குதல்.
- ❖ தரமான கல்வியை உருவாக்க புதிய ஆய்வுகள் மேற்கொள்ளுதல், கல்வி ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல்.
- ❖ தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம், தேசிய ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சிக் குழுமம் பண்பாட்டு வளம் மற்றும் பயிற்சி மையம், போன்ற தேசிய மற்றும் உலக அளவிலான கல்வி நிறுவனங்களுடன் தொடர்பு வைத்திருப்பதன் மூலம் கல்வித் தரத்தை நிலைநிறுத்துதல்.
- ❖ ‘அனைவருக்கும் கல்வி’ என்ற இலக்கில் தொடக்க மற்றும் உயர்தொடக்கக் கல்வியை அனைவரும் அடைய அரசுக்கு உதவுதல்.
- ❖ அவ்வப்போதைய காலக்கட்டங்களில் ஏற்படும் மாற்றங்களை உட்புகுத்தி கலைத்திட்டம், பாடத்திட்டம் மற்றும் பாடநூல்களை வடிவமைத்தல் மற்றும் சீரமைத்தல்.
- ❖ தொழில்நுட்ப உபகரணங்கள் வழியானக் கற்றலை வளப்படுத்தப் பயிற்சிக் கையேடுகளில் ஒளி-ஒலி கல்வி மென்பொருள்களைப் பயன்படுத்துதல்.
- ❖ கல்வித்திட்டங்களின் வழியே தமிழகக் கல்வித் துறையில் ஏற்பட்ட தாக்கத்தைக் கண்டறிந்து மதிப்பிடல் மற்றும் ஆய்வுகள் மேற்கொள்ளல்.

### 4.2. தர மேம்பாட்டுச் செயல்பாடுகள்

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், பணியிடைப் பயிற்சிகள், கல்வியாளர் முன்னேற்றத் திட்டங்கள், கல்விப் பயணங்கள், மாவட்ட அளவிலான கருத்தரங்கங்கள், செயலாராய்ச்சிகள் மற்றும் கல்வி ஆராய்ச்சித் திட்டங்கள் போன்றவற்றை ஒருங்கிணைத்து வருகின்றது. இச்செயல்பாடுகள் மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவன கல்வியாளர்களின் தரத்தினை மேம்படுத்துவதோடு மாவட்டங்களில் உள்ள ஆசிரியர்களின் தேவைகளுக்கேற்ப அறிவு மற்றும் திறன்களில் பயிற்சி அளிக்கவும் உதவுகிறது.

### 4.3. இலக்கை அடைவதற்குரிய வழி முறைகள்:

- ❖ கல்வி படக்காட்சி நிலையம், தனது சிறந்த உத்திகளைக் கொண்டு சிறந்த ஒளி/ ஒலி நாடாக்களை தயாரித்துள்ளது. கல்வி படத்தொலைக்காட்சி நிலையம் மூலம் முக்கிய பாடங்களில் குறுந்தகடுகளைத் தயாரித்து, ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில் அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களுக்கு வழங்கி வருகிறது. அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களிலும் செயற்கைகோள் மூலம் கல்வித் திட்ட பணிக்கான கலந்துரையாடல் செய்யும் வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களிலும், சிறந்த புத்தகங்கள்,

ஆராய்ச்சி கட்டுரைகள் ஆகியவற்றின் பிரதிகள் ஒவ்வொரு ஆண்டும் நூலகத்திற்கென வழங்கப்படுகிறது. இதன் மூலம், கல்வித் திட்ட பணிகளை சிறப்பான முறையில் செயற்படுத்துவதற்கும், தரத்தினை மேம்படுத்துவதற்கும் வழி வகுத்துள்ளது.

- ❖ மாவட்ட அளவிலான, மாநில அளவிலான கருத்தரங்குகள் சிறப்பாகத் திட்டமிடப்பட்டு, கற்றல் கற்பித்தலில் புதிய உத்திகளைப் பரிமாறிக் கொள்ள, ஆசிரியர்கள், கல்வியாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- ❖ ஆராய்ச்சித் திட்டங்களின் தொகுப்புகள், பாடவாரியான செயல் ஆராய்ச்சிகளின் சுருக்கம் போன்றவை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களின் மூலம் தமிழில் தயாரிக்கப்பட்டு அனைத்து தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கும் வழங்கப்படவுள்ளது.
- ❖ மாநில அளவில் ஆராய்ச்சிக் குழுவினை அமைத்து, மாவட்ட அளவில் தயாரித்தளித்த ஆராய்ச்சிக் கருத்துருக்களை சரி பார்த்து வழங்கவுள்ளது. ஆராய்ச்சிக் குழுவின் மூலம், மாவட்ட அளவில் நடைபெறும் ஆராய்ச்சிகளை மதிப்பீடு செய்து ஆராய்ச்சியின் போது வல்லுநர்களின் அறிவுரைகளுடன் மேற்கொள்ள உள்ளது.
- ❖ ஆண்டிற்கான திட்டவரைவு மற்றும் வரவு-செலவு நிதி அறிக்கையினையும் தயாரித்து திட்டத்தினை மேற்கொள்வதற்காக நடுவண் அரசிடம் அளித்துள்ளது.

### 4.4. ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்

தற்போது மாநிலத்தில் 756 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் உள்ளன. இந்நிறுவனங்களில் 51,380 ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் சேர்க்கை செய்யப்பட்டுள்ளனர். அரசு இடங்கள் அனைத்தும் ஒற்றைச் சாளர கலந்தாய்வு மூலம் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி, பயிற்சி இயக்ககத்தால் நிரப்பப்படுகிறது.

## 2009-2010 ஆம் ஆண்டில் சாதனைகள்

### 4.5. மாநில கல்வி மேலாண்மை பயிற்சி நிறுவனம், தமிழ்நாடு (SIEMAT)

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தால், கல்வித்துறை சார்ந்த அலுவலர்களுக்கு முறையான பயிற்சி அளிக்கும் நோக்கோடு மாநில கல்வி மேலாண்மை பயிற்சி நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் கல்வித்துறையை சார்ந்த இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள், மெட்ரிகுலேஷன் பள்ளி ஆய்வாளர்கள், பள்ளித் தலைமையாசிரியர், உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள் ஆகியவர்களின் பணி திறனை மேம்படுத்தவும், அவர்களுக்கு நிர்வாகம் மற்றும் மேலாண்மை பயிற்சிகளை முறையாக வழங்கவும் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

### 4.6. ஆசிரியர் கல்வி பட்டய வகுப்பிற்கான புதிய வளநூல் பயிற்சி

தேசிய கலைத்திட்டம் 2005- (National Curriculum Framework, 2005) இன் அடிப்படையில் ஆசிரியர் பட்டயப் பயிற்சியின் கலைத்திட்டத்தையும், பாடத் திட்டத்தையும் மாற்றி அமைக்கும் பணியை ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் மேற்கொண்டுள்ளது. திறமைமிக்க கல்வி வல்லுநர்கள் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்களின் அனுபவத்தையும், திறமையையும் பயன்படுத்தி ஆசிரியர் கல்விக்கான பாடங்களுக்கான பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டது. 2008-2009ஆம் கல்வியாண்டிலிருந்து இக்கலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஆசிரியர் கல்வி பட்டய வகுப்பிற்கான புதிய வளநூல் பயிற்சி மாநில மற்றும் மாவட்ட அளவில் அனைத்து பாடங்களுக்கும் நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் மாவட்ட ஆசிரியர் கல்வி

மற்றும் பயிற்சி நிறுவனம், அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம், அரசு உதவிபெறும் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் மற்றும் சுயநிதி ஆசிரியர் பயிற்சி நிறுவன கல்வியாளர்கள் பங்கேற்றதோடு 51,380 ஆசிரியர் பட்டயப் பயிற்சி மாணவர்கள் பயன்பெற்றனர்.

**4.7. வளரிளம் பருவக் கல்வித் திட்டம்**

வளரிளம் பருவக் கல்வித் திட்டம் 9 மற்றும் 11 வகுப்பில் பயிலும் மாணவர்களுக்குத் தேவையான வாழ்வியல் திறன்களை போதித்துள்ளது. அவர்கள் வாழ்வியல் திறன்களைப் பெறுவதால் வாழ்வின் சவால்களை எதிர்கொள்வதுடன் தங்கள் சுகாதாரத்தைப் பாதிக்கும் செயல்களிலிருந்து தப்பித்துக் கொள்கின்றனர். வாழ்வியல் திறன் கல்வி 9,722 பள்ளிகளில் உள்ள வளரிளம் பருவ மாணவர்களுக்குப் போதிக்கப்பட்டது. இதனால் 19,752 ஆசிரியர்கள் மற்றும் 19,752 மாணவ பயிற்றுநர்களும் பயன்பெற்றனர். தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்தால் நிதி உதவி வழங்கப்பட்டு, இவ்வியக்ககம் மூலம் மாநிலம் முழுவதும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நிறுவனம் மற்றும் மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு வழங்கிய "வளரிளம் பருவக் கல்வி திட்டம் வாழ்வியல் திறன் மேம்பாடு" கையேடு ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சி இயக்ககத்தால் மொழி பெயர்க்கப்பட்டு, திருத்தம் செய்யப்பட்டது. அவ்வாறு மொழிபெயர்ப்பு செய்யும் போது வட்டார வாழ்க்கை மற்றும் கலாச்சார மதிப்பீடுகளையும் கருத்தில் கொள்ளப்பட்டு கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது.

**4.8. தேசிய மக்கள் தொகை கல்வித்திட்டம்**

மத்திய அரசின் நிதி உதவியுடன், தேசிய மக்கள் தொகை கல்வித்திட்டம் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 9 ஆம் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கானப் பங்கேற்று நடித்தல் போட்டி பள்ளி அளவிலும், வட்டார அளவிலும், மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் நடத்தப்பெற்றது. இதில் 19,510 மாணவர்கள் கலந்துக்கொண்டனர்.

**4.9. நாட்டு நலப்பணித் திட்டம்.**

நாட்டு நலப்பணித்திட்டம் 34 அலகுகளில் 1700 ஆசிரியர் பயிற்சி மாணவ தொண்டர்களுடன் (29 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களிலும், 5 அரசு ஆசிரியர் பயிற்சி பள்ளிகளிலும்) துவங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அலகும் 50 ஆசிரியர் பயிற்சி மாணவர்களைக் கொண்டது. சமுதாய மேம்பாட்டிற்கான தொடர்பணி மற்றும் சிறப்பு முகாம்கள் தொடர்ச்சியாக பத்து நாட்கள் ஒவ்வொரு மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்திலும் இரண்டு அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனத்திலும் சிறப்பாக நடைபெற்றது. ஒவ்வொரு மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்திலும் மற்றும் அரசு ஆசிரியர் பயிற்சி பள்ளியிலும் நாட்டு நலப்பணித்திட்ட அலகிற்கு 2009-2010 ஆம் ஆண்டில் 100 மாணவர் தொண்டர்களை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**4.10. கல்வித் தொலைக்காட்சிப் படப்பதிவு நிலையம்**

கல்வித் தொலைக்காட்சிப் படப்பதிவு நிலையத்தின் மூலம் கல்வி சார் பாடக்காட்சி நிகழ்ச்சிகள் தொடர்பான வரைவுகள் தயாரிக்கப்பட்டு ஒன்று முதல் எட்டு வகுப்புகளுக்கான ஒலி,

ஒளி நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றன. இந்நிகழ்ச்சிகள் திங்கள் மற்றும் வெள்ளி தோறும் சென்னைத் தொலைக்காட்சி நிறுவனத்தில் “காண்போம் கற்போம்” கல்வி நிகழ்ச்சியில் ஒளிபரப்பு செய்யப்படுகின்றன. 2009-2010ம் ஆண்டில் 40 வீடியோ நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு ஒளிபரப்பப்பட்டுள்ளன. தற்போது நடைமுறையிலுள்ள செயல்வழிக் கற்றல் முறை மற்றும் படைப்பாற்றல் கல்வி முறையும் பாடமாக்கப்பட்டுள்ளன. 2010-2011 ஆம் கல்வியாண்டில் கல்வித் தொலைக்காட்சிப் படப்பதிவு நிலையத்தில் 40 உட்புற படப்பிடிப்புகளும் மற்றும் 12ஆம் வகுப்பிற்கான இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பாடங்களுக்கான செய்முறைப் பயிற்சிகள் சார்ந்த 10 வெளிப்புற படப்பிடிப்புகளும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**4.11. நமது மாவட்டத்தை நாம் அறிவோம்**

தொடக்கக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு மாணவர்கள் தங்கள் மாவட்டத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும் மாவட்டத்தில் உள்ள முக்கியமான இடங்களை வீடியோ பதிவு செய்யவும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களுக்கு ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் அறிவுரைகள் வழங்கியுள்ளது.

**4.12. கல்விச் செயற்கைக் கோள்**

கல்விச் செயற்கைக் கோள் வழி தொலையரங்க முறையை பின்பற்றி கடந்த ஆண்டு கல்வி தொடர்பான 30 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. 2009-10ஆம் கல்வியாண்டில் இந்நிகழ்ச்சிகள் மூலம் ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களில் பணியாற்றும் 400 முதுநிலை விரிவுரையாளர்கள் மற்றும் விரிவுரையாளர்களும் 200 வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்களும் பயனடைந்துள்ளனர். மாதத்தின் இரண்டாவது மற்றும் நான்காவது செவ்வாய் கிழமைகளில் இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது.

**4.13. சமச்சீர் கல்வித் திட்டம்**

தமிழகத்திலுள்ள மாநில கல்வி, மெட்ரிகுலேசன் கல்வி, ஆங்கிலோ இந்தியன் கல்வி மற்றும் ஓரியண்டல் கல்வி வாரியங்களின் பாடத் திட்டத்தினை ஆய்வு செய்து ஒன்று மற்றும் பத்து வகுப்புகளின் பொது பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டது. பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் உதவியுடன் பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டு இணையதளத்தில் வெளியிடப்பட்டது. இது தொடர்பாக கீழ்க்காணும் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன:

- மாநில, மாவட்ட, வட்டார, துணை வட்டார அளவில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. மாநிலம் முழுவதும் 32 மாவட்டங்களிலிருந்து 4,088 கல்வியாளர்களிடமிருந்து கருத்துக்கள் பெறப்பட்டன.
- கல்வியாளர்களிடமிருந்து பெறப்பட்டக் கருத்துக்களை ஆராய்ந்து வரைவுப் பாடத்திட்டம் இறுதி செய்யப்பட்டது.
- ஒன்று மற்றும் ஆறாம் வகுப்புக்களுக்கான பாடப் புத்தகங்கள், கல்வியாளர்கள், கல்வி வல்லுநர்கள் மற்றும் கல்வி ஆய்வர்களைக் கொண்டு எழுதப்பட்டு பாடப்புத்தங்கள் இறுதி செய்யப்பட்டுள்ளன.

**4.14. மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களுக்கு கூடுதல் கட்டிடங்கள்**

மைய அரசின் நிதியுதவியுடன் ரூ.3.82 கோடி செலவில் 2009-2010ஆம் ஆண்டில், 13 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் பயிற்சிக்கூடம் கட்டப்பட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம்,

ஜோகில்பட்டியில் பகுதி II திட்டங்களின் கீழ் 2009-2010ல் கட்டிடங்களை மேம்படுத்தும் பொருட்டு ரூ.60.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**4.15. புதிய ஆசிரியர்களுக்கான பணி அறிமுகப்பயிற்சி**

2007-2008 மற்றும் 2008-2009 ஆம் ஆண்டுகளில் புதிதாக நியமனம் செய்யப்பட்ட தொடக்கக் கல்வி ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு 2010-2011 பாடப்பொருள் மற்றும் கற்பித்தல் முறைகளில் பணியிடைப் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 9,902 ஆசிரியர்கள் இப்பயிற்சி மூலம் பயனடைவர்.

**4.16. டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது**

6 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன கல்வியாளர்கள் மற்றும் ஒரு அரசு ஆசிரியர் பயிற்சி கல்வியாளருக்கு, டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது செப்டம்பர் 5, 2009-ல் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது. ரூ.5000/- ரொக்கம் மற்றும் சான்றிதழ் இவ்விருதில் அடங்கும்.

**4.17. மின்ஆளுமை**

உலகமயமாதல் மற்றும் தொழில் நுட்பப் புரட்சி போன்ற மாற்றங்களின் விளைவாக ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் இணையதளத்துடன் இணைக்கப்பட்டு அனைத்து தகவல் பரிமாற்றங்களும் மின்னஞ்சல் மூலம் நடைபெறுகிறது. இவ்வியக்ககத்தின் முக்கிய செயல்பாடுகள் இணையதளத்தில் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இணையதள முகவரி: www.dtert.tn.nic.in

## 5. பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி

### 5.1. தொலைநோக்கு

- முழு எழுத்தறிவுத்திட்ட இலக்கை அடைதல்
- எழுத்தறிவற்றவர், பள்ளிப்படிப்பை இடையில் விட்டோர், பள்ளிக்கே செல்லாதோர், ஆகியோர்களுக்கான வாழ்நாள் முழுவதற்கான கல்வியை பல்வகை முயற்சிகள் மற்றும் வழிமுறைகள் மூலம் அளித்தல்.

### 5.2. செயல்நோக்கு

- 15 வயதிற்கு மேல் உள்ள எழுத்தறிவு அற்ற அனைவருக்கும் எழுத்தறிவினை அளித்தல்
- எழுத்தறிவு சதவீதத்தில் ஆண்/பெண் இடையில் நிலவும் வேற்றுமையைக் குறைக்கும் நோக்கத்தோடு தமிழ்நாட்டிலுள்ள மகளிர் எழுத்தறிவு சதவீதத்தில் 50 சதவீதத்திற்கும் குறைவாக உள்ள மாவட்டங்களில் எழுத்தறிவுத் திட்டத்தினை செயல்படுத்துதல்.

**இலக்கை அடைவதற்கு பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள்**

### 5.3. கற்கும் பாரதம்

மைய அரசின் திட்டமான "கற்கும் பாரதம்" என்ற புதிய எழுத்தறிவுத் திட்டத்தை உலக எழுத்தறிவு தினமான 08.09.2009 அன்று மாண்புமிகு பாரத பிரதமர் துவக்கி வைத்துள்ளார். அதன்படி, 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி பெண்கள் எழுத்தறிவில், மாநிலங்களில் 50 சதவிகிதத்திற்கும் குறைவாக உள்ள 365 மாவட்டங்களை தேர்வு செய்து இந்த புதிய எழுத்தறிவுத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்திற்கு மைய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவி முறையே 75: 25 என்ற விகிதத்தில் இருக்கும். தற்போது முதல்கட்டமாக 5 மாவட்டங்களில் ஈரோடு, பெரம்பலூர், விழுப்புரம், தருமபுரி மற்றும் சேலம் ஆகிய 5 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்த ஆயத்தப் பணிகளான பணியாளர்கள் தேர்வு, கருத்தாளர்களுக்கானப் பயிற்சி, கற்றல்/ கற்பித்தல் உபகரணங்களான நூல்கள் தயாரித்தல் போன்றவைகள் நடைபெற்று வருகின்றன.

### 5.4. மாநில வயது வந்தோர் எழுத்தறிவு திட்டம்

பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம் மாநிலத்தில் நிலவும் எழுத்தறிவுத் திட்டச் செயல்பாடுகளை தொடர்ந்து செய்திடவும், புதிதாக கற்றவர்களின் கற்றல் திறனை தக்கவைத்துக் கொள்ளவும், அதனை மேம்படுத்திடவும், மேலும் தமிழகத்தின் எழுத்தறிவு சதவீதத்தை 2011 ஆம் ஆண்டிற்குள் 80 விழுக்காடு உயர்த்திடவும், ஆண் பெண் எழுத்தறிவு சதவீத இடைவெளியை குறைத்திடவும், மாநில வயதுவந்தோர் கல்வித் திட்டம் என்ற புதிய திட்டத்தை ஏற்கனவே நடைபெற்று வந்த வளர்கல்வித் திட்ட மையங்களை பயன்படுத்தி செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

இப்புதிய திட்டம், தமிழகத்திலுள்ள 25 மாவட்டங்களில் ரூ.36.19 இலட்சம் செலவில் 6 மாதத்திற்கு முதற்கட்டமாக செயல்படுத்தப்பட உள்ளது.

### 5.5. 2009-10ம் ஆண்டின் சாதனைகள்

இதுவரை வளர்கல்வித் திட்ட செயல்பாட்டிற்காக தமிழ்நாட்டில் மாவட்டங்களில் 14,107 வளர்கல்வி மையங்கள் அமைத்து செயல்படுத்தப்பட்டன. இதற்காக மைய அரசு மொத்தம் ரூ.82.92 கோடி நிதியை அளித்துள்ளது. இத்திட்டத்தில் அனைத்து வகையிலும் பயன்பெற்றோர் எண்ணிக்கை 52.58 இலட்சம். அதில் ஆண்கள் 18.92 இலட்சம், பெண்கள் 33.66 இலட்சம்.

### 5.6. மகளிருக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டம்

மகளிருக்கான சிறப்பு எழுத்தறிவு திட்டத்தின் கீழ், மாநிலத்திலுள்ள 5,33,333 எழுத்தறிவற்ற மகளிர் எழுத்தறிவு பெறுவதற்காக, ரூ.4.00 கோடி விடுவித்து, அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

### 5.7. விடுபட்ட மகளிருக்கான எழுத்தறிவுத் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள 32 மாவட்டங்களில் மாநில எழுத்தறிவு சதவீதத்தை விட குறைவாக மகளிர் எழுத்தறிவில் பின்தங்கியுள்ள 17 மாவட்டங்கள் கண்டறியப்பட்டு விடுபட்ட மகளிருக்கான எழுத்தறிவுத் திட்டம் மைய மாநில அரசுகளால் 2:1 என்ற விகிதாச்சார அடிப்படையில் நிதி உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டது. தருமபுரி, விழுப்புரம், பெரம்பலூர் (அரியலூர்), நாமக்கல், ஈரோடு, சேலம், திருவண்ணாமலை, கரூர், சிவகங்கை, இராமநாதபுரம், புதுக்கோட்டை, தேனி, விருதுநகர், வேலூர், கிருஷ்ணகிரி, கடலூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய 17 மாவட்டங்களுக்கு மைய அரசால் ரூ.380.72 இலட்சம் நேரடியாக சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது.

### 5.8. பெண்களுக்கான 100 நாள் எழுத்தறிவுத் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் ஒரு ஒன்றியத்திற்கு ஒரு மையம் என்ற அளவில் 385 ஒன்றியங்களிலும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் பயனடைந்த மகளிர் எண்ணிக்கை 21,769 ஆகும். இத்திட்டத்தில் அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் செயல்வழிக் கற்றல் முறையில் எழுத்தறிவு கற்பிக்கப்பட்டது.

### 5.9. சிறை இல்லவாசிகளுக்கான எழுத்தறிவுத் திட்டம்

தமிழக அரசின் சிறைத்துறையின் ஒத்துழைப்புடன் வளர்கல்வித் திட்டத்தின் மூலம், மத்திய சிறை மற்றும் கிளை சிறைகளில் உள்ள கல்லாத சிறை இல்லவாசிகளுக்கு செயல்வழி கற்றல் முறையில் (ABL) 11 மாவட்டங்களில் கற்பித்தல் பணி நடைபெற்றது. இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த பயனாளிகள் மொத்தம் 2,795 பேர் (ஆண்கள் 2,159 பெண்கள் 636)

### 5.10. நாட்டுநலப் பணித்திட்டத்தின் மூலம் பெண்களுக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டம்

பள்ளி மாணவர்களை பெரிய அளவில் ஈடுபடுத்துவதன் மூலம் எழுத்தறிவின்மையை முழுமையாக அகற்ற புதிய திட்டமான “எழுத்தறிவற்ற ஒருவருக்கு எழுத்தறிவு பெற்ற ஒரு மாணவன் எழுத்தறிவு அளிக்கும் திட்டம்” நாட்டு நலப்பணித் திட்ட மாணவ, மாணவிகளின் மூலம் திட்டமிடப்பட்டு, செயல்படுத்தப்பட்டது. இதில் பயன் பெற்றோர் 1,25,000 பெண்கள் ஆவர்.

### 5.11. 2010 -2011 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ள முக்கிய செயல் திட்டங்கள்

1. தமிழ்நாட்டில் எழுத்தறிவற்ற 15 வயதிற்கு மேற்பட்ட அனைவரையும் எழுத்தறிவு பெறச் செய்தல்
2. வளர்கல்வித் திட்டத்தில், அனைவருக்கும் கல்வி இயக்கத்துடன் இணைந்து செயல்வழி கற்றல் முறையில் (ABL) கற்பித்தல் பணி நடைமுறைப்படுத்தி கல்வித் தரத்தை மேம்படுத்த திட்டமிடுதல்
3. சிறைகளில் உள்ள கல்லாத இல்லவாசிகளுக்கு செயல்வழி கற்றல் முறையில் (ABL) கற்பித்தல் பணியைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துதல்

4. தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பள்ளிகளில் கற்கும் பாரதம் மையங்களை (Lok Shiksha Kendra) தொடங்கி கல்லாத பெற்றோர்களுக்கு கல்வி கற்பித்தல்
5. புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள் மேலும் கற்றலை தொடருவதற்கு பள்ளிக் கல்விக்கு சமமான கல்வியை (3வது வகுப்பு, 5வது வகுப்பு மற்றும் 8வது வகுப்புக்கு நிகராக) திறந்த வெளிப் பள்ளி மூலம் வழங்குதல்
6. மக்களாட்சியில், பொதுமக்களின் பங்கினை அறிந்து கொள்ள, உரிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

## 6. அரசுத் தேர்வுகள்

பொதுத்தேர்வுகளை நடத்தி உரிய காலத்தில் தேர்வு முடிவுகளை வெளியிடுவது அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் முக்கிய கடமையாகும். அரசுத் தேர்வுத் துறையால் மேல்நிலைப் பொதுத் தேர்வுகள் மற்றும் இடைநிலைத் தேர்வு / மெட்ரிகுலேசன்/ ஆங்கிலோ இந்தியன் பொதுத் தேர்வுகள் ஆண்டுதோறும் அந்தந்த பாடத்திட்டத்தின்படி நடத்தப் படுகின்றன. ஆசிரியர் கல்வி பயிற்சிக்கான டிப்ளமோ தேர்வும், எட்டாம் வகுப்பு தேர்வும் தொழில்நுட்ப சான்றிதழ் தேர்வும் ஆக 33 வகையான தேர்வுகளை அரசுத் தேர்வுகள் துறை நடத்தி மதிப்பெண் சான்றிதழ்களை வழங்கி வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் மேல்நிலை / இடைநிலை / மெட்ரிக் ஆங்கிலோ இந்தியத் தேர்வுகள் மூன்று பருவங்களில் (மார்ச்/ஏப்ரல், ஜூன்/ஜூலை, மற்றும் செப்டம்பர்/ அக்டோபர்) நடத்தப்படுகின்றன. ஏனைய தேர்வுகள் ஆண்டுக்கு ஒருமுறை நடத்தப்படுகின்றன.

### 6.1. மார்ச் 2009-ம் ஆண்டில் பொதுத் தேர்வு முடிவுகள் குறித்த ஆய்வு

| தேர்வுகள் | தேர்வெழுதிய பள்ளி மாணவர் எண்ணிக்கை | தேர்ச்சி பெற்றவர்கள் எண்ணிக்கை | தேர்ச்சி சகவிகிதம் |
|---|---|---|---|
| மேல்நிலை (+2) | 6,40,844 | 5,32,222 | 83.0 % |
| இடைநிலை (SSLC) | 8,22,872 | 6,71,437 | 81.6 % |
| மெட்ரிகுலேஷன் | 1,16,586 | 1,09,597 | 94.0 % |
| ஆங்கிலோ இந்தியன் பள்ளி | 4,685 | 4,497 | 95.9 % |
| ஓ.எஸ்.எல்.சி | 1,324 | 1,220 | 92.2% |

துறையால் வழங்கப்பட்ட பொதுத் தேர்வுகளுக்கான சான்றிதழ்களை தவறவிட்டவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, உரிய கட்டணம் பெற்று அவர்களுக்கு சான்றிதழ்களின் இரண்டாம்படி/ சான்றளிக்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

மாநிலத்தின் அனைத்துக் கல்லூரிகளிலும் சேர்க்கப்படும் மாணவர்கள் மற்றும் இத்துறையால் அளிக்கப்பெறும் சான்றிதழ்களின் அடிப்படையில் வேலை வாய்ப்பைப் பெறுபவர்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் சமர்ப்பிக்கும் சான்றிதழ்களின் மெய்த்தன்மையை இத்துறை சரிபார்த்து வழங்குகிறது. போலிச் சான்றிதழ் அளிப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இம்மாநிலத்தில் 10/12 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்று பிற மாநிலத்தில் மேல்படிப்பைத் தொடர விழையும் நபர்களுக்கு புலப்பெயர்ச்சிச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

### 6.2. தேர்வு முடிவுகள் தொடர்பான நடவடிக்கைகள்

தேர்வு முடிவுகள் தொடர்பான நடவடிக்கைகள் அரசு தகவல் தொகுப்பு மையத்தினால் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், இடைநிலை மற்றும் மேல்நிலைத் தேர்வுகளுக்கான முடிவுகளைக் கணினி மூலம் தயாரிப்பதும் அரசு தகவல் தொகுப்பு மையத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. மேலும், கீழ்க்கண்ட பணிகளும் இம்மையத்தால் மேற்கொள்ளப்படுகின்றன:

1. மேல்நிலை / இடைநிலை / மெட்ரிக் / ஆங்கிலோ இந்தியத் தேர்வுகளின் மதிப்பெண் சான்றிதழ்களின் மெய்த் தன்மையைச் சரிபார்த்தல்.

2. மேல்நிலை / இடைநிலை / மெட்ரிக் / ஆங்கிலோ இந்தியத் தேர்வுகளின் மறு மதிப்பீடு / மறுகூட்டல் செய்யப்பட்டபின் திருத்தப்பட்ட மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்குதல்.

**6.3. மைய அரசு பணியாளர் தேர்வாணையம் மற்றும் பணியாளர் தேர்வாணையக் குழுமத்தினால் நடத்தப்படும் தேர்வுகளை நடத்துதல்**

மைய அரசின் சார்பாக ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும் அனைத்து மைய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் பணியாளர் தேர்வாணைய குழுமத்திற்கான தேர்வுகளை இத்துறை மிக்க கவனத்துடன் சென்னை மையத்தில் நடத்துகிறது. இந்த வகையினில் மைய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குடிமைப் பணிக்கான 14 தேர்வுகளும் பணியாளர் தேர்வாணையத்தின் 12 தேர்வுகளும் இத்துறையால் நடத்தப்படுகிறது.

**6.4. மதிப்பெண் சான்றிதழ்கள்**

மார்ச் 2000ம் ஆண்டிலிருந்து மேல்நிலை / இடைநிலை / மெட்ரிக் / ஆங்கிலோ இந்தியத் தேர்வுகளுக்கான மதிப்பெண் சான்றிதழ்களில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் விவரம் அச்சடித்து தேர்வர்களுக்கு வழங்கப்படுகிறது.

**6.5. தேர்வு முடிவுகள்**

மேல்நிலை / இடைநிலை / மெட்ரிக் / ஆங்கிலோ இந்தியத் தேர்வுகளுக்கான முடிவுகள் வெளியிடப்பட்ட நாளன்றே இத்துறையின் இணையதளம் மற்றும் தனியார் இணையதளங்களிலும் மதிப்பெண்களுடன் கிடைப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

**6.6. பொதுத் தேர்வுகளுக்கான விடைத்தாட்களில் மதிப்பெண் மறுகூட்டல் மற்றும் விடைத்தாள்களின் அச்சுப்பகர்ப்பு நகல் வழங்குதல்**

மதிப்பெண் மறுகூட்டல் கோரி விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களுக்கும், மேல்நிலை/ இடைநிலை / மெட்ரிக்/ ஆங்கிலோ – இந்தியன் மற்றும் ஆசிரியர் கல்வி பட்டயத் தேர்வுகளுக்கான அனைத்துப் பாடங்களுக்கும் இவ்வசதி அளிக்கப்படுகிறது.

மேல்நிலை தேர்வில் விடைத்தாள் திருத்துதலில் ஒளிவு மறைவற்ற தன்மையை கடைப்பிடிக்கும் வகையில் ஏழு பாடங்களுக்கு மட்டும் விண்ணப்பித்த மாணவர்களுக்கு விடைத்தாட்களின் அச்சுப்பகர்ப்பு நகல் வழங்கப்பட்டு வந்தது. மார்ச் 2009 முதல், அனைத்துப் பாடங்களுக்கும் இவ்வசதி நீட்டிக்கப்பட்டுள்ளது.

**6.7. சிறப்பு துணைப் பொதுத் தேர்வுகள்**

மார்ச் மாதத்தில் நடைபெறும் எஸ்.எஸ்.எல்.சி./ மெட்ரிக்/ ஆங்கிலோ இந்தியன் மற்றும் மேல்நிலைத் தேர்வில் ஒன்று முதல் மூன்று பாடங்களில் தோல்வியுறும் மாணவர்களுக்கு அந்த முழுக் கல்வி ஆண்டை வீணாக்காமல் உடனடியாக தேர்வெழுதி தேர்ச்சிப் பெற்று உயர் கல்வி கற்பதற்கு வழி செய்யும் வகையில் ஜுன் மாதத்தில் சிறப்புத் துணைப் பொதுத் தேர்வு நடத்தப்படுகிறது. தேர்வர்கள் மேற்படிப்புக்குச் செல்ல வசதியாக உடனே தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டு அந்த ஆண்டிலேயே பள்ளி / கல்லூரிகளில் சேருகின்றனர்.

### 6.8. தேசிய அளவிலான திறனறித் தேர்வுகள்

தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி குழுமத்தின் (NCERT) சார்பில் தேசியத் திறனாய்வுத் தேர்வு இவ்வலுவலகத்தினால் நடத்தப்பட்டு வருகிறது. 7 ஆம் வகுப்புப் பள்ளி இறுதித் தேர்வில் மொத்த மதிப்பெண்களில் 60% -மற்றும் அதற்கு மேலும் பெற்று 8 ஆம் வகுப்புப் பயின்று கொண்டிருக்கும் மாணவர்கள் இத்தேர்வெழுத தகுதியானவர்கள். இத்தேர்வுத் திட்டத்தின் இரண்டாம் கட்ட தேசிய அளவிலான தேர்விற்குப் பின் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு 9 ஆம் வகுப்பு முதல் ஆராய்ச்சி பட்டப்படிப்பு வரை மாதந்தோறும் ரூ. 500/- உதவித் தொகையாக வழங்கப்படும். ஆராய்ச்சி பட்டப் படிப்பிற்கு அதிகபட்சமாக நான்கு ஆண்டுகளுக்குப் பல்கலைக் கழக மானியக் குழு வீதப்படி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 285 மாணவர்களுக்கு ஆண்டுதோறும் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்த எண்ணிக்கை மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை மாறும்.

### 6.9. தமிழ்நாடு ஊரக மாணவர் திறனாய்வுத் தேர்வு

ஊரக மாணவர்களை ஊக்குவிப்பதற்காக, அரசினால் அளிக்கப்படும் சலுகைகளைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையினில் தமிழ்நாடு ஊரக மாணவர்களுக்கான திறனாய்வுத் தேர்வு இத்துறையினால் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. இதன்படி ஆண்டு வருமானம் ரூ.1.00 லட்சத்திற்கு மிகாமல் இருக்கும் பெற்றோர்களின் குழந்தைகளுக்கு அவர்கள் ஒன்பதாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் போது (சென்னை, புதுச்சேரி மாவட்டங்கள் நீங்களாக) தேர்வு நடத்தப்பட்டு தகுதியின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 50 மாணவிகளும் 50 மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டு ஆண்டுதோறும் ரூபாய் 1000/- வீதம் படிப்புதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

### 6.10. மனஅழுத்தமின்றி பொதுத் தேர்வுகளை எழுத கூடுதல் நேரம் வழங்குதல்

இடைநிலைக்கல்வி மற்றும் மேல்நிலைக் கல்வி பொதுத் தேர்வுகள் எழுதும் மாணவர்களுக்கு மார்ச் 2008 ஆம் ஆண்டிலிருந்து 10 மணித்துளிகள் கூடுதல் கால அவகாசம் அளிக்கப்பட்டு வருகிறது. இதனால் தேர்வு எழுதுவதற்கு முன்பாக தேர்வு எழுதுபவர்கள் மனதை ஒருமுகப்படுத்தி உளவியலாக தங்களைத் தயார்படுத்திக் கொள்வதற்கு ஏதுவாக, வினாத்தாளைப் படிப்பதற்கு 10 மணித்துளிகள் கூடுதலாகக் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது. ஊரகப் பகுதிகளிலிருந்து நெடுந்தொலைவு பயணித்துத் தேர்வறையை அடையும் மாணவர்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

கவனத்தை ஒருமுகப்படுத்தும் நேரமாக அளிக்கப் பட்டுள்ள 10 மணித்துளிகள் தவிர விடைத்தாளின் முன்பக்கத்தில் மாணவர் சார்ந்த விவரங்களை குறிப்பாக பதிவு எண் உள்ளிட்ட விவரங்களை பூர்த்தி செய்திட காலை மணி 10.15 வரை அதாவது **“விடைத்தாளில் விவரங்களை நிறைவு செய்தல் நேரமாக”** 5 மணித்துளிகள் கூடுதல் கால அவகாசம் வழங்கப்படுகிறது.

### 6.11. தேசிய வருவாய் வழி மற்றும் தகுதிப் படிப்பு உதவித் தொகைத் திட்டம்

மத்திய அரசின் “தேசிய வருவாய் வழி மற்றும் தகுதிப் படிப்பு உதவித் தொகைத் திட்டம்” (NATIONAL MEANS CUM MERIT SCHOLARSHIP SCHEME) என்ற திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் 6,695 மாணவ மாணவியர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. 8ஆம்

வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் அவர்களது பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.1,50,000/- க்கு மிகாமல் இருப்பின் அவர்கள் பொருட்டு தேர்வு நடத்தி மதிப்பெண் அடிப்படையிலும், இட ஒதுக்கீடு அடிப்படையிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ/ மாணவியர்களுக்கு 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் காலத்தில் மாதமொன்றுக்கு ரூ.500/- வீதம் ஆண்டொன்றுக்கு மொத்தம் ரூ.6000/- ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும்.

**6.12. மத்திய அரசால் வழங்கப்படும் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான படிப்புதவித் திட்டம்**

மார்ச் 2009 மேல்நிலைத்தேர்வில் 80% மதிப்பெண்களும் அதற்கு மேலும் பெற்று தேர்ச்சி பெற்று கல்லூரிகளில் முதலாம் ஆண்டு பயின்று வரும் மாணவர்களுக்குப் பாடத்தொகுப்பு வாரியாக தகுதியின் அடிப்படையில் இத்திட்டத்தின் கீழ், படிப்புதவித் தொகை வழங்கப்பட்டுவருகிறது. அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகளில் பட்டப்படிப்பு பயின்று வரும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூபாய் 1000 வீதமும், முதுநிலை பட்டப்படிப்பு பயிலும் நிலையில் மாதந்தோறும் ரூபாய் 2000 வீதமும் வழங்கப்படுகிறது.

**6.13. இணையதளம்**

கால அட்டவணை, விண்ணப்பப் படிவத்தின் மாதிரி வடிவம், இத்துறையால் நடத்தப்படும் பல்வேறு தேர்வுகள் தொடர்பான சான்றிதழ் நகல் மற்றும் மதிப்பெண் பட்டியலின் சான்றொப்பமிடப்பட்ட நகலுக்கான கட்டண விவரங்கள் போன்றவற்றை வெளியிடுவதற்காக இத்துறைக்கென தனிப்பட்ட இணையதளம் உள்ளது. மாணவ சமுதாயத்தின் நலனுக்காக முந்தைய ஆண்டுகளின் மேல்நிலைக் கல்வி, எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வுகளின் வினாத்தாள்கள் இத்துறையின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இணையதள முகவரி www.tn.gov.in/dge

## 7. ஆசிரியர் தேர்வு வாரியம்

அரசு பள்ளிகளுக்குத் தகுதியும் திறமையும் மிக்க ஆசிரியர்களைத் தேர்வு செய்யும் பணிகளுக்காக ஆசிரியர் தேர்வு வாரியம் 1987-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. ஆசிரியர் தேர்வு வாரியம் பள்ளிகளுக்கான ஆசிரியர்களை வேலை வாய்ப்பு அலுவலக பதிவு மூப்பு அடிப்படையிலும், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கான விரிவுரையாளர்களை நேர்காணல் நடத்தியும், பொறியியல் கல்லூரிகளுக்கான விரிவுரையாளர்களை போட்டி எழுத்துத் தேர்வு நடத்துவதன் மூலமாகவும் தேர்வு செய்கிறது. இவ்வாரியத்தின் மூலம் அரசு பள்ளி மற்றும் கல்லூரிகளுக்காக 34297 ஆசிரியர்கள்/ விரிவுரையாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### 7.1. 2010-2011 ஆம் ஆண்டிற்கான திட்டம்

கீழ்க்கண்ட காலிப்பணியிடங்களுக்கான பணி நாடுநர்களை வேலைவாய்ப்புப் பதிவு மூப்பு அடிப்படையிலும், போட்டித் தேர்வுகள் மூலமாகவும் தெரிவு செய்யும் பணியினை ஆசிரியர் தேர்வு வாரியம் மேற்கொள்ள முனைந்துள்ளது.

**வேலைவாய்ப்பு பதவி மூப்பு அடிப்படையின் மூலம் தெரிவு செய்தல்**

- **i)** 6665 பட்டதாரி ஆசிரியர்களை, பள்ளிக் கல்வித் துறை, தொடக்கக் கல்வித் துறை மற்றும் சென்னை, மதுரை மற்றும் கோவை மாநாகராட்சி பள்ளிகளுக்கு தெரிவு செய்தல்.
- **ii)** 905 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களை பள்ளிக் கல்வித்துறைக்கு தெரிவு செய்தல்.
- **iii)** 1314 சிறப்பாசிரியர்களை - அதாவது 853 உடற்கல்வி ஆசிரியர்கள், 231 ஓவிய ஆசிரியர்கள், 135 தையல் ஆசிரியர்கள் மற்றும் 95 இசை ஆசிரியர்களை - தெரிவு செய்தல்.
- **iv)** ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனத்திற்கான 29 இளநிலை விரிவுரையாளர்களை தெரிவு செய்தல்.

### 7.2. போட்டித் தேர்வுகள் மூலம் தெரிவு செய்தல்

- **i)** அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் 1064 வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்களை தெரிவு செய்தல்.
- **ii)** அரசு பொறியியற் கல்லூரிகளுக்கு 61 விரிவுரையாளர்களை தெரிவு செய்தல்.
- **iii)** அரசு தொழில் நுட்பப் பயிலகங்களுக்கு 51 விரிவுரையாளர்களை தெரிவு செய்தல்.
- **iv)** அரசு சட்டக் கல்லூரிகளுக்கு 28 விரிவுரையாளர்களை Lecturer (Senior scale) மற்றும் விரிவுரையாளர்களை (Senior Scale - Pre Law) தெரிவு செய்தல்.

### 7.3. இணையதளம்

ஆசிரியர் தேர்வு வாரியம், இணைய தளத்தின் மூலமாக காலிப்பணியிட விவரங்கள், தேர்வுக்கான அட்டவணைகள், தேர்வர்கள் எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் சான்றிதழ் சரிபார்த்தலில் பெற்ற மதிப்பெண்கள், வேலைவாய்ப்பக பதிவு மூப்பின் இனவாரி சுழற்சி வரையறுக்கப்பட்ட தேதி மற்றும் இறுதி தேர்ச்சிப்பட்டியல் ஆகியவற்றை, பொதுமக்கள் அறியும் வண்ணம் வெளியிட்டு வருகிறது. இவ்வாரியத்தால் மேற்கொள்ளப்படும் அனைத்து நியமனங்களும் ஒளிவு மறைவின்றி வெளிப்படையான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இணையதள முகவரி http:\\trb.tn.nic.in

## 8. தமிழ்நாட்டுப்பாடநூல்கழகம்

தரமான பாடநூல்களை தேவைப்படும் அனைவருக்கும் உரிய காலத்தில் எளிதாகக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பது இக்கழகத்தின் நோக்கமாகும். மாநில பாடத்திட்டத்தின்கீழ் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு பாடநூல்கள் கிடைப்பதை உறுதி செய்யவும் மற்றும் ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் பிரிவினருக்கு இலவசப் பாடநூல்கள் வழங்குவதும் இக்கழகத்தின் செயல் நோக்கமாகும்.

சமச்சீர்க் கல்வி திட்டம் அறிமுகப்படுத்துவதன் காரணமாக, அத்திட்டத்தின் கீழ் 1 மற்றும் 6 ஆம் வகுப்புகளுக்கான பாடநூல்களை அச்சடிக்கும் பொறுப்பு தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சமச்சீர் கல்வியின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் 1 மற்றும் 6ஆம் வகுப்புகளுக்குத் தேவையான தரமான பாடநூல்களை பல வண்ணங்களில் நவீன அச்சுத் தொழிற் நுட்பத்துடன் (CTP மூலம்) தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் அச்சடித்து வழங்க உள்ளது.

### 8.1. பாடநூல்களின் விவரம்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் 1 முதல் 12ஆம் வகுப்பு வரையில் 513 தலைப்புகளில் 540 பாடநூல்களை (தொகுதி-I மற்றும் II உட்பட) அச்சிடுகிறது. பாடநூல்கள் மற்றும் தொழிற்கல்விக்கான பாடநூல்கள் மற்றும் ஆசிரியர் பட்டய பயிற்சிக்கான வளநூல்கள், பாடநூல் கழகத்தால் அச்சடிக்கப்பட்டு வழங்கப் படுகின்றன அதன் விவரம் பின்வருமாறு:-

- மாணவர்களுக்கான பாடநூல்கள்
- சமச்சீர்க் கல்வி திட்டதின்கீழ் 2010- 2011 கல்வியாண்டிற்கான 1 மற்றும் 6ஆம் வகுப்புகளுக்கு மாற்றியமைக்கப்பட்ட பாடநூல்கள்.
- மேல்நிலை முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான தொழிற்கல்வி பாடநூல்கள்
- 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான சுற்றுச்சூழல் கல்வி பாடநூல்கள்
- அரசு பல்தொழில்நுட்ப கல்லூரிகளில், முதல் மற்றும் இரண்டாம் அரையாண்டு பட்டயப் படிப்பிற்கான பாடநூல்கள்.
- சிறுபான்மை மொழிகளில் பயிலும் மாணவர்களுக்கு 10ஆம் வகுப்பு வரை மொழி மற்றும் வழிப் பாடநூல்கள், மேல்நிலை முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு பள்ளி மாணவர்களுக்கு சிறுபான்மை மொழிப் பாடநூல்கள்.
- ஆசிரியர் பட்டயப் பயிற்சி மாணவர்களுக்கான வளநூல்கள்
- ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைகளின் கீழ் இயங்கும் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சிறப்பு வழிகாட்டி நூல்கள்
- பெற்றோர் ஆசிரியர் கழகத்திற்காக 10 மற்றும் 12ஆம் வகுப்பிற்கான வினாவங்கி, மாதிரி வினாவங்கி மற்றும் தீர்வு நூல்கள்

### 8.2. இலவசப் பாடநூல் விநியோகம்

அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும், சுயநிதிப் பள்ளிகளில், தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கும் இலவசப் பாடநூல்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. மேலும்,

மெட்ரிகுலேசன் பள்ளிகளில் 1 முதல் 12ம் வகுப்பு வரையில் பயிலும் மாணவர்களுக்கு தமிழ்ப்பாடநூல்கள் மட்டும் 2007-2008ம் கல்வியாண்டு முதல் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

**8.3. பிற துறைகளுக்கான இலவசப் பாடநூல்கள்**

ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் கள்ளர்சீர்மரபினர் நலத்துறை, சமூக நலத்துறை மற்றும் வனத்துறையினால் நடத்தப்படும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கான இலவசப் பாடநூல்கள் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தால் அச்சடிக்கப்பட்டு இக்கழக வட்டார அலுவலகங்களிலிருந்து அந்தந்தத்துறைகளுக்கு நேரிடையாக வழங்கப்படுகின்றன.

**8.4. இலவசப் பாடநூல்கள் விநியோகம் விவரம்**

| வருடம் | எண்ணிக்கை (இலட்சத்தில்) | மதிப்பு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 2006-2007 | 669.21 | 6400.04 |
| 2007-2008 | 676.65 | 6857.71 |
| 2008-2009 | 628.32 | 7851.11 |
| 2009-2010 | 665.89 | 8393.47 |
| 2010-2011 | 620.20 | 7102.20 (தோராயமாக) |

**8.5. பிற மாநிலங்களில் தமிழில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் இலவசப் பாடநூல்கள்**

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் மும்பை மாநகராட்சி, டெல்லி தமிழ்ச் சங்கம், அகமதாபாத் மாநகராட்சி, அந்தமான் நிகோபார் தமிழ் ஐக்கிய சங்கம், கொச்சின் போன்ற பிற மாநிலங்களில் உள்ள தமிழ் மாணவர்களின் நலனுக்காக ஆண்டுதோறும் பாடநூல்களை இலவசமாக வழங்கி வருகிறது.

**8.6. இணையதளம்**

இந்தியாவிலேயே 1 முதல் 12 ஆம் வகுப்புகளுக்கான பாடநூல்களை வலைத்தளத்தில் வெளியிடும் ஒரே மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், தமிழ், ஆங்கிலம் மற்றும் சிறுபான்மை மொழிகளான தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் உருது உட்பட 6 மொழிகளில் 540 பாடநூல்களை வெளியிட்டு வருகிறது. தொடக்க நாள் அன்று 348 பாடநூல்கள் இணைய தளத்தில் வெளியிடப்பட்டன.

ஆசிரியர் பட்டயப் பயிற்சிக்கான வளநூல்கள் மற்றும் 10ம் வகுப்பு மெட்ரிகுலேசன் பள்ளி பாடநூல்கள் சேர்த்து மொத்தம் 21 பாடநூல்கள் 08-09-2008 அன்று இணைய தளத்தில் வெளியிடப்பட்டன. கூடுதலாக இரண்டாம் ஆண்டு ஆசிரியர் பட்ட பயிற்சிக்கான 11 வளநூல்கள் 24-8-2009 அன்று இணையதளத்தில் வெளியிடப்பட்டன. மீதமுள்ள பாடநூல்களும் படிப்படியாக இணைய தளத்தில் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

இணையதளம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடம் நல்ல வரவேற்பினை பெற்றுள்ளது. 31-1-2010 தேதியில் இந்த இணையதளம் 8,33,790 பார்வையாளர்களைக் கொண்டுள்ளது. இதில் வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்களின் எண்ணிக்கையும் அடங்கும். இணைய தளத்தின் முகவரி : **www.textbooksonline.tn.nic.in**

## 9. பொது நூலகங்கள்

பொது நூலக இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றிப் பொது மக்களிடையே படிக்கும் பழக்கத்தை ஊக்குவித்தல் பொதுநூலக இயக்ககத்தின் தொலைநோக்காகும்.

### 9.1. குறிக்கோள்கள்

1) நூலக இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றுதல்
2) நூலகங்களுக்குப் போதிய உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்
3) நூலகங்களுக்குத் தேவையான புத்தகங்களைப் போதிய அளவில் வாங்குதல்
4) நூலகச் சேவையை மேம்படுத்த நவீனக் கருவிகளை நூலகங்களில் நிறுவுதல்
5) நிதி ஆதாரங்களைப் பெருக்கி நூலக வசதியினை மேம்படுத்துதல்

### 9.2. வழிமுறைகள்

1) தேசிய அறிவுசார் ஆணையத்தின் அறிவுறுத்தலுக்கு இணங்கப் பொது நூலகங்களைத் தகவல் மற்றும் அறிவு மையங்களாக மாற்றியமைத்தல்.
2) பொது நூலக நிர்வாகத்தில் மின் ஆளுகையை அறிமுகம் செய்தல்.
3) அனைவருக்கும் நூலகம் என்ற இலக்கினை அடையும் வகையில் புதிய நூலகங்களைத் திறத்தல்.
4) நூலகங்களை வலைத்தளத்தால் இணைத்து நூலகத் தேடலை எளிமையாக்குதல்.
5) நூலகத் தானியங்கு சேவையை உருவாக்குதல்.
6) பழமை மற்றும் அரிய வகை நூல்களைக் கணினி மூலம் படி எடுத்தல்.
7) நூலகச் சேவைகளை மேம்படுத்த நிதியாதாரங்களைப் பெருக்குதல்.
8) சிறிய நகரங்களில் கூடுதலாகக் குடிமைப்பணிப் பயிற்சி மையங்களைத் தோற்றுவித்தல்.
9) புதிய நூலகக் கட்டடங்களைக் கட்டுதல்.
10) அரசு மற்றும் தனியார் கூட்டு முயற்சியில் நூலக வசதிகளை மேம்படுத்ததல்.
11) நூலகச் சீரமைப்பு மாநாடு நடத்துதல்.
12) பதிப்பாளர்கள் மற்றும் புத்தக விற்பனையாளர்களுடன் இணைந்து புத்தகப் பூங்காக்கள் அமைத்தல்.

தமிழ்நாடு பொது நூலகச் சட்டம், 1948 ன்படி மாநிலத்தில் பொது நூலகங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. 1972 ஆம் ஆண்டு பொது நூலகத் துறைக்கென தனியாக இயக்ககம் ஏற்படுத்தப்பட்டது. தற்போது பல்வேறு நிலைகளில் தமிழகமெங்கும் 4,028 நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் விவரம் வருமாறு :

| | | |
|---|---|---|
| 1) | கன்னிமாரா பொது நூலகம், சென்னை | 1 |
| 2) | மாவட்ட மைய நூலகங்கள் | 31 |
| 3) | கிளை நூலகங்கள் | 1669 |
| 4) | நடமாடும் நூலகங்கள் | 10 |
| 5) | ஊர்ப்புற நூலகங்கள் | 1721 |
| 6) | பகுதி நேர நூலகங்கள் | 596 |
| | **மொத்தம்** | **4028** |

### 9.3. கன்னிமாரா பொது நூலகம், சென்னை

கன்னிமாரா பொது நூலகம், நூல்கள் விநியோகச் (செய்தித்தாள்கள் மற்றும் பருவ இதழ்கள்) சட்டம் 1954 இன்படி தேசிய வைப்பு நூலகமாகச் செயல்படுகிறது. நூல்கள் விநியோகச் சட்டத்தின்படி இந்தியாவில் அச்சிடப்பெறும் அனைத்து நூல்கள், நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்களை இலவசமாகப் பெறக்கூடிய தகுதியினையும் இந்நூலகம் பெற்றுள்ளது. மேலும்

யுனெஸ்கோ, ஆசிய வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் தகவல் மையமாகவும் இந்நூலகம் செயல்படுகிறது. இந்நூலகம் 6.85 இலட்சம் நூல்களைக் கொண்டு பல்வேறு பிரிவுகளுடன் பொது மக்களுக்குச் சிறந்த நூலகப் பணி ஆற்றி வருகின்றது.

கன்னிமாரா பொது நூலகத்திலுள்ள குடிமைப்பணிப் பிரிவு, பாடநூல் பிரிவு, மற்றும் மொழி நூல்கள் பிரிவு ஆகியவற்றில் குளிர்சாதன வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் கன்னிமாரா பொது நூலகத்தைப் பற்றிய விவரங்கள் அனைத்தும் இணையதளத்தில் வெளியிடப் பட்டுள்ளன. www.connemarapubliclibrarychennai.com

### 9.4. கணினி மயமாக்குதல் மற்றும் மாவட்ட நூலகங்களை இணைத்தல்

நூலகங்களின் செயல்பாட்டை உயர்த்தவும் வாசகர்களுக்குச் சிறந்த நூலகச் சேவை அளிக்கவும் நூலகங்கள் கணினி மயமாக்கப்பட்டு வருகின்றன. பின்வரும் நூலகங்களில் கணிப்பொறி, இணையதளம் மற்றும் மின்னஞ்சல் போன்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன:

1. கன்னிமாரா பொது நூலகம், சென்னை.
2. 31 மாவட்ட மைய நூலகங்கள்
3. மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள 100 கிளை நூலகங்கள்.
4. இது தவிர, கொல்கத்தா, இராஜா ராம்மோகன்ராய் நூலகஅறக்கட்டளை நிதியுதவியின் கீழ் 2007-08 ஆம் ஆண்டில் 42 நூலகங்களிலும், 2008-09 ஆம் ஆண்டில் 50 நூலகங்களிலும், 2009-10 ஆம் ஆண்டில் 50 நூலகங்களிலும் கணிப்பொறி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
5. சென்னை, கன்னிமாரா பொது நூலகத்துடன் மாவட்டம் மற்றும் வட்டங்களில் உள்ள நூலகங்களை இணைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

### 9.5. நூல்களை மின் அலகு மயமாக்குதல்

பழம் பெருமை வாய்ந்த அரிய நூல்களை மின் அலகு முறையில் படியெடுத்து குறுந்தகட்டில் பதிவு செய்து பாதுகாக்கும் பொருட்டு 7 ஸ்கேனர்கள் நிறுவப்பட்டு சுமார் 2000 தமிழ் நூல்கள் மின் அலகு முறையில் பாதுகாக்கப்படுகின்றன.

### 9.6. நூலகத் தானியக்க வசதி

மாவட்ட மைய நூலகங்களில் நூலகச் சிறப்பு மென்பொருளைப் பயன்படுத்தி நூல்கள் வழங்குதல் மற்றும் திரும்பப்பெறுதல் போன்ற பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை மேலும் மேம்படுத்திப் பல்வேறு நூலகங்களை ஒருங்கிணைத்து வாசகர்கள் அதிகப் பலன்களைப் பெறும் வகையில் தனித்தன்மை வாய்ந்த புதிய நூலக மென்பொருளை உருவாக்கும் பணி நடைபெற்றுவருகிறது. சென்னை, அண்ணா பல்கலைக்கழக வல்லுநர்களின் வழிகாட்டுதலுடன் ஒரு சிறப்புக் குழு அமைக்கப்பட்டு இப்பணி நடைபெற்றுவருகிறது.

### 9.7. பொது நூலகச் செய்திமடல்

பொது நூலகத் துறை சார்பாக, “**பொது நூலகச் செய்திமடல்**” என்ற காலாண்டு இதழ் 1996 ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்டு வருகிறது**.** இச்செய்திமடல் பொது நூலகத் துறையின் வளர்ச்சிப் பணிகள், நூலக இயக்கம் தொடர்பான செய்திகள், மாவட்டச் செய்திகள், பொதுமக்கள் தெரிந்துகொள்ள வேண்டிய பல்வேறு அரசாணைகள் மற்றும் கல்வி சம்பந்தப்பட்ட கட்டுரைகள்

ஆகியவை இடம் பெற்று வாசகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இதுவரை இச்செய்தி மடலின் 54 இதழ்கள் வெளிவந்துள்ளன.

**9.8. வாசகர் வட்டம்**

பொது நூலக இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றிப் பொது மக்களிடையே படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு நூலகத்திலும் கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், நூலக உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர்ப் பிரமுகர்கள் கொண்ட “வாசகர் வட்டம்” என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாசகர் வட்டம் மூலம் நூல்கள் அறிமுகம், இலக்கியச் சொற்பொழிவு, சுதந்திர தின விழா, குடியரசு தின விழா, முக்கிய தேசியத் தலைவர்களின் பிறந்த நாள் விழா, உள்ளிட்ட பல பயனுள்ள நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**9.9. இராசா ராம்மோகன் ராய் நூலக அறக்கட்டளை, கொல்கத்தா**

கொல்கத்தாவில் உள்ள இராசா ராம்மோகன் ராய் நூலக அறக்கட்டளை மைய அரசின் கலை மற்றும் பண்பாட்டுத்துறையின் கீழ் செயல்படும் நிறுவனம் ஆகும். இவ்வறக்கட்டளை இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் பொது நூலக வளர்ச்சிக்கு இணை மானியம் அளித்து வருகிறது. தமிழ்நாடு அரசு, இந்த அறக்கட்டளையில் இருந்து ஆண்டுதோறும் ரூ400.00 இலட்சம் இணை மானியம் பெற்றுக் கருத்தரங்குகள், சிறுவர் பிரிவு, புதிய நூல்களை வாங்குதல், நூலக உட்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குதல் போன்ற பல சிறப்பான நூலகச் சேவைகளைச் செய்து வருகிறது.

**9.10. நூல்கள் வாங்குதல்**

ஆண்டுதோறும் வெளியிடப்படும் புதிய சிறந்த நூல்கள் வாங்கப்பட்டு நூலகங்களில் வைக்கப்படுகின்றன. வல்லுநர்கள் அடங்கிய நூல் தேர்வுக்குழு வாசகர்களுக்கு ஏற்ற நூல்களைத் தேர்வு செய்கின்றது. ஆண்டுதோறும் சுமார் ரூ.10.00 கோடி மதிப்புள்ள தமிழ் மற்றும் ஆங்கில நூல்கள் வாங்கப்பட்டு மாநிலத்திலுள்ள அனைத்து நூலங்களுக்கும் பகிர்ந்தளிக்கப் படுகின்றன.

தமிழ் நூல்களில் அதிகபட்சம் 750 படிகள் வாங்கப்பட்டு வந்தன. தற்போது இது 1000 படிகளாக உயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த மூன்றாண்டுகளில் வாங்கப்பட்ட நூல்களின் விவரம் வருமாறு:

| வ.எண். | ஆண்டு | தொகை ரூபாய் கோடியில் | தலைப்புகள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | 2006-2007 | 1.71 | 419 |
| 2. | 2007-2008 | 17.33 | 8012 |
| 3. | 2008-2009 | 16.63 | 4016 |

**9.11. குடிமைப்பணிக் கல்வி மையங்கள்**

வங்கித் தேர்வாணையம், இரயில்வே தேர்வாணையம், மத்திய பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் போன்றவை நடத்தும் போட்டித் தேர்வுகளில் சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் மற்றும் இளைய தலைமுறையினர் பங்கேற்கும் வகையில் போட்டித் தேர்வுக்கான நூல்களைப் படித்து பயனுறும் வகையில் நூலகங்களில் “குடிமைப்பணிக்

கல்வி மையங்கள்" என்ற பிரிவு செயல்பட்டு வருகின்றது. 31 மாவட்ட மைய நூலகங்கள், வட்டத் தலைநகர் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள 150 நூலகங்கள், சிறிய நகரங்களிலுள்ள 50 நூலகங்களில் இக்குடிமைப்பணிக் கல்வி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

**9.12. நூலகக் கட்டடங்கள் கட்டுதல்**

4,028 நூலகங்களில் 10 நடமாடும் நூலகங்கள் தவிர எஞ்சியுள்ள 4,018 நூலகங்களில் 1,625 நூலகங்கள் சொந்தக் கட்டடத்திலும், 2,087 நூலகங்கள் வாடகையில்லாக் கட்டடங்களிலும், 306 நூலகங்கள் வாடகைக் கட்டடத்திலும் இயங்கி வருகின்றன. இதில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் நூலகங்களுக்கு, படிப்படியாக கட்டட வசதி ஏற்படுத்தும் பொருட்டு தேவையான காலிமனை பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**9.13. புத்தகப் பூங்கா**

பொது மக்களிடையே படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, சென்னை, கன்னிமாரா பொது நூலகத்தில் முதல் நிரந்தரப் **"புத்தகப் பூங்கா"** அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. இதர மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்ட மைய நூலகத்திலும் ஆண்டுதோறும் நவம்பர் மாதம் நடைபெறும் தேசிய நூலக வார விழாவின் போது புத்தக விற்பனையாளர்கள் / பதிப்பாளர்கள் ஒத்துழைப்புடன் புத்தகப் பூங்கா அமைக்கப்படுகிறது.

**9.14. அண்ணா நூற்றாண்டு நூலகம், சென்னை**

பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டு நிறைவைப் போற்றும் வகையில், தமிழக அரசால் சென்னை, கோட்டூர்புரத்தில் கட்டப்பட்டுவரும் "அண்ணா நூற்றாண்டு நூலகம்" உலகத் தரத்தில் அமையவுள்ளது. சுமார் ரூ.172.17 கோடி மதிப்பீட்டில் 9 அடுக்குகளுடன் கட்டப்பட்டு வரும் இந்நூலகத்தில் தமிழகத்தின் கலை, இலக்கியம், கலாச்சாரத்தைப் பறைசாற்றும் நூல்களும், தென்னிந்திய மொழிஇலக்கியங்களும், சிறந்த ஆங்கில நூல்களும், பொறியியல், மருத்துவம், கல்வி, மேலாண்மை, சட்டம், பொருளாதாரம், வரலாறு, கணிப்பொறியியல் போன்ற அனைத்து வகையான நூல்களும் இடம் பெறச் செய்யப்படும். கணினி மயமாக்கப்பட்ட நூலக நிர்வாக முறையைப் பயன்படுத்திச் சிறந்த நூலகச் சேவையை இந்நூலகம் வழங்கும். அன்றாட வாசகர்களுக்கும், ஆராய்ச்சி வல்லுநர்களுக்கும் ஏற்ற களமாக 12 இலட்சம் நூல்கள், மின் புத்தகங்கள் மற்றும் மின்னிதழ்களுடன் இந்நூலகம் திகழவிருக்கிறது.

**9.15. பதிப்பாளர் நலவாரியம் அமைத்தல்**

தமிழகத்தில் புத்தகம் வெளியிடும் பணியிலுள்ள அனைத்துத் தரப்பினரும் பயன் பெறத்தக்க வகையில் **"தமிழ்நாடு புத்தகப் பதிப்பாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்"** அமைக்கப்பட்டு அவ்வாரியத்தில் உறுப்பினர்கள் சேர்க்கும் பணி விரைவுபடுத்தப்பட்டுள்ளது. அவ்வுறுப்பினர்கள் அனைவருக்கும் அடையாள அட்டை வழங்குதல் மற்றும் அவர்களுக்கான நலத் திட்ட உதவிகள் வழங்குதல் போன்ற பணிகளும் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளுக்காக இவ்வாரியத்திற்கு ரூபாய் 50.00 இலட்சம் தமிழ்நாடு அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**9.16. நூலகப் போட்டிகள்**

பொது நூலக இயக்ககம் சார்பில் பேச்சு, கட்டுரை மற்றும் நூலக விழிப்புணர்வு வாசகங்கள் எழுதுதல் போட்டிகள் பள்ளி மாணவ, மாணவியருக்காக 2010 ஆம் ஆண்டு சனவரியில் நடத்தப்பட்டன. இப்போட்டிகளில் மாநில அளவில் முதலிடம் பெறும் மாணவர் சிங்கப்பூர் சுற்றுலாவிற்கும், இரண்டாம் இடம் பெறுபவர் இந்தியச் சுற்றுலாவிற்கும், மூன்றாம் இடம் பெறுபவர் தமிழகச் சுற்றுலாவிற்கும் அழைத்துச் செல்லப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வறிவிப்பின் காரணமாக 10 இலட்சம் மாணவ, மாணவியர் பொது நூலகங்களில் புதியதாக உறுப்பினராகியுள்ளனர். இதன் வெற்றியைத் தொடர்ந்து 2011 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள போட்டிகளில் முதலிடம் பெறுவோர் ஐரோப்பியச் சுற்றுலாவிற்கும், இரண்டாம் இடம் பெறுவோர் சிங்கப்பூர் சுற்றுலாவிற்கும், மூன்றாம் இடம் பெறுவோர் இந்தியச் சுற்றுலாவிற்கும் அழைத்துச் செல்லப்படுவர். இத்தகைய தொடர் முயற்சியால் நூலக உறுப்பினர் சேர்க்கை அதிகமடையும், குறிப்பாக மாணவ, மாணவியரின் நூலகப் பயன்பாடு மற்றும் அறிவு வளர்ச்சி அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும்.

**9.17. பூங்காக்களில் புத்தகம்**

ஒவ்வோர் ஆண்டும் சென்னையில் புத்தகக் கண்காட்சி நடைபெறுவதும், அதைப் பல்லாயிரக் கணக்கானோர் பார்வையிடுவதும், அங்கு நூல்கள் வாங்குவதும் சிறப்புற நடைபெற்று வருகிறது. எனினும் கண்காட்சிக்கு வருகை தருபவர்கள் அங்குள்ள நூல்களைப் படித்துத் தேர்வு செய்யும் வாய்ப்பு மிகக் குறைவு. எனவே, இவ்வாண்டு புத்தகக் கண்காட்சிக்கு முன்பாகவே பொது நூலக இயக்ககமும், புத்தகப் பதிப்பாளர்களும் இணைந்து காலையிலும், மாலையிலும், பூங்காக்களில் புதிய புத்தகங்களைக் காட்சிக்கு வைத்து, பொது மக்கள் அவற்றை எடுத்துப் படித்து, அப்புத்தகங்களின் மீது தமது நாட்டத்தைப் பெருக்கிக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது. சென்னை, மதுரை, திருச்சி, கோவை போன்ற பெரு நகரங்களில் இம்முயற்சி நல்ல பலனைத் தந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

**9.18. நூலகச் சீரமைப்பு மாநாடு**

பொதுமக்களிடையே நூலக விழிப்புணர்வை ஏற்படுத்தவும் மற்றும் படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கவும் நூலகங்களின் தேவைகளுக்குப் பொது மக்கள், வாசகர் வட்டம், கொடையாளர்கள் ஆகியோரிடமிருந்து நன்கொடைகள் பெற்று நூலகங்களின் வசதிகளை மேம்படுத்தும் வகையில் நூலகச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தப்படுகின்றன. இதனால் பொது மக்களிடமிருந்து நன்கொடைகள் பெறப்பட்டு, அதன் மூலம் நூலகங்களின் தேவைகள் நிறைவு செய்யப்படுகின்றன. இதுவரை பின்வரும் 5 மாவட்டங்களில் நூலகச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன:

1) கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் நீலகிரி ஆகிய மூன்று மாவட்டங்கள் சேர்ந்து 29.09.2007 அன்று கோயம்புத்தூரில் மாநாடு நடத்தப்பட்டு முறையே ரூ.190.43 இலட்சம், ரூ.47.21 இலட்சம் மற்றும் ரூ.33.94 இலட்சம் மதிப்பிலான நன்கொடைகள் பெறப்பட்டன.

2) தேனி, மதுரை மற்றும் திண்டுக்கல் ஆகிய மூன்று மாவட்டங்கள் சேர்ந்து 17.02.2008 அன்று, தேனியில் மாநாடு நடத்தப்பட்டு முறையே ரூ.92.43 இலட்சம், ரூ.123.17 இலட்சம் மற்றும் ரூ.101.73 இலட்சம் மதிப்பிலான நன்கொடைகள் பெறப்பட்டன.

3) திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, கரூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய நான்கு மாவட்டங்கள் சேர்ந்து 29.02.2008 அன்று திருச்சிராப்பள்ளியில் இம்மாநாடு நடத்தப்பட்டு மேற்படி 4 மாவட்டங்களிலும் முறையே ரூ.110.52 இலட்சம், ரூ.78.94 இலட்சம், ரூ.69.72 இலட்சம் மற்றும் ரூ.78.11 இலட்சம் மதிப்பிலான நன்கொடைகள் பெறப்பட்டன.

4) விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை ஆகிய மூன்று மாவட்டங்கள் சேர்ந்து 20.11.2008 அன்று விருதுநகரில் மாநாடு நடத்தப்பட்டு முறையே ரூ.273.75 இலட்சம், ரூ.54.87 இலட்சம் மற்றும் ரூ.44.24 இலட்சம் மதிப்பிலான நன்கொடைகள் பெறப்பட்டன.

5) திருவண்ணாமலை, வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மூன்று மாவட்டங்கள் சேர்ந்து 24.12.2008 அன்று திருவண்ணாமலையில் மாநாடு நடத்தப்பட்டு முறையே ரூ.194.51 இலட்சம், ரூ.252.98 இலட்சம் மற்றும் ரூ.128.50 இலட்சம் மதிப்பிலான நன்கொடைகள் பெறப்பட்டன.

மற்ற மாவட்டங்களிலும் நூலகச் சீரமைப்பு மாநாடு நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 10. மாற்றுத்திறனாளிகள் நலன்

மாற்றுத்திறன் படைத்தோரையும், சமுதாயத்திலுள்ள பிற நபர்களைப் போல எக்குறையும் இன்றி வாழ வலுவூட்டி அவர்கள் ஒருங்கிணைந்த வகையில் இயங்கும் ஒரு சமுதாயத்தை உருவாக்கி, அதில் சம பங்கினை பெற வைப்பதே தமிழக அரசின் நோக்கமாகும். இந்நோக்கத்தினை கருத்தில் கொண்டு பள்ளிக்கல்வித் துறையில் பின்வரும் முனைவுகள் எடுக்கப் பட்டுள்ளன:

### 10.1. இடைநிலைக்கல்வி

மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்திற்கு மாற்றாக 2009-2010ம் கல்வியாண்டு முதல் ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரையுள்ள இடைநிலைக் கல்வியை 100% மைய அரசின் நிதியுதவியினைக் கொண்டு அனைத்து பல்வேறு வகையான மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கும் தொண்டு நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு மாற்றுத்திறன் குழந்தைக்கும் புத்தகம், எழுதுபொருட்கள், சீருடை, தங்கும் வசதி, போக்குவரத்து உள்ளிட்ட செலவினமாக ரூ.3,000/- ஆண்டொன்றுக்கு வழங்கப்படுகிறது. கூடுதலாக மாநில அரசு தலா ரூ.600/- வீதம் ஒவ்வொரு மாற்றுத்திறன் குழந்தைக்கும் வழங்கும்.

பள்ளிக் கல்வி இயக்ககம் மூலம் 7830 மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கு நோட்டுப்புத்தகங்கள், சீருடைகள், விடுதி கட்டணங்கள், உதவி உபகரணங்கள் மற்றும் கூடுதல் கல்வி வசதி அளித்த சிறப்பாசிரியர்களுக்கு ஊதியம் வழங்கிய வகையில் ரூ.10.05 கோடி செலவிடப்பட்டுள்ளது.

### 10.2. அரசுப் பள்ளிகளில் மாற்றுத் திறனாளிகள் ஆசிரியர்களாக நியமனம்

2006ம் ஆண்டு முதல் 2010 வரை ஆசிரியர் கல்வித் தகுதி பெற்றவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் **1114 மாற்றுத் திறனாளிகள் ஆசிரியர்களாக** அரசு பள்ளிகளில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

### 10.3. அனைவருக்கும் கல்வித் திட்டம்

**6 முதல் 14 வயது வரையிலான மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கு வாழ்க்கைக்குகந்த தரமான உள்ளடங்கிய கல்வியினை வழங்கிட கடந்த நான்கு ஆண்டுகளில் அனைவருக்கும் கல்வி வாயிலாக கீழ்க்கண்ட செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:**

- 90543 மாற்றுத்திறன் கொண்டுள்ள குழந்தைகள் அரசு மற்றும் மாற்றுப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
- 75,174 மாற்றுத்திறன் கொண்டுள்ள குழந்தைகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- 4476 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 22,000 மிகவும் பாதிக்கப்பட்ட குழந்தைகள் வீட்டுவழிக் கல்வி மற்றும் பயிற்சியின் மூலம் தொடர்ந்து பயனடைந்து வருகின்றனர்.
- தரமான உள்ளடங்கிய கல்வி வழங்கிட அனைத்து தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.
- மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளின் பெற்றோர்களுக்கு சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

- 412 வட்டாரங்களில் ஆதார வள பயிற்சி மையங்கள் செயல்படுகின்றன.
- 333 பகல் நேர பாதுகாப்பு மையங்கள் துவங்கப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு வருடமும் உள்ளடங்கிய கல்வி சார்ந்து அனைத்து வட்டாரங்களிலும் விழிப்புணர்வு முகாம்கள், மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.
- 1144 அரசு பள்ளிகளில் ரூ.73.00 இலட்சம் செலவில் சாய்தள நடைபாதை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.
- 826 சிறப்பு ஆசிரியர்கள், 133 தசைப்பயிற்சி நிபுணர்கள் பணியாற்றி வருகின்றனர்.

**கடந்த நான்கு ஆண்டுகளில் மாற்றுத்திறன் கொண்டுள்ள குழந்தைகளுக்கு மட்டும் தரமான உள்ளடங்கிய கல்வி வழங்கிட ரூபாய் 52.27 கோடி அனைவருக்கும் கல்வித் திட்டம் வாயிலாக செலவிடப்பட்டுள்ளன.**

**2010-11 ஆம் கல்வியாண்டில் மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கான உள்ளடங்கிய கல்வி செயல் திட்டங்கள் பின்வருமாறு:**

- வட்டாரத்திற்கு 5 சிறப்பாசிரியர்கள்.
- விழிப்புணர்வு முகாம்கள், மருத்துவ முகாம்கள் நடத்திட ரூபாய் 2.27கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- உதவி உபகரணங்கள் வழங்குதல் மற்றும் அறுவை சிகிச்சை மேற்கொள்ள ரூபாய் 3.88 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- 299 ஆதாரவளமையங்களை மேம்படுத்த ரூபாய் 2.39 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- 362 பகல் நேர பாதுகாப்பு மையங்கள் நடத்திட ரூபாய் 6.51 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- 699 அரசு பள்ளிகளில் ரூபாய் 69.90 லட்சம் செலவில் நவீன கழிவறை வசதிகள் செய்யப்படும்.
- 645 அரசு பள்ளிகளில் ரூபாய் 51.60 லட்சம் செலவில் சாய்தள நடைபாதை வசதிகள் ஏற்படுத்தப்படும்.
- மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான 23 உண்டு உறைவிடப் பள்ளிகள் ரூபாய் 1.61 கோடி செலவில் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- விடுதியில் தங்கி பயில 382 மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கு ரூபாய் 30.56 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.
- 1217 மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கு நோட்டுப் புத்தகங்கள் மற்றும் சீருடைகள் வழங்குவதற்காக ரூபாய் 13.39 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ஆசிரியர்கள், ஆசிரியப் பயிற்றுநர்கள், சிறப்பாசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோர்க்கு சிறப்பு பயிற்சி வழங்கிட ரூபாய் 1.29 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கு வாழ்வியல் திறன் பயிற்சி மற்றும் கல்விச் சுற்றுலா நடத்திட ரூபாய் 36.20 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள செயல்பாடுகளை மேற்கொள்ள ரூபாய் 39.03 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 10.4. அரசுத் தேர்வுகள்

அரசுத் தேர்வுகள் துறையால் நடத்தப்படும் மேல்நிலைத் தேர்வு எஸ்.எஸ்.எல்.சி., ஓ.எஸ்.எல்.சி, மெட்ரிக், ஆங்கிலோ - இந்தியன் மற்றும் ஈ.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வுகளில், மாற்றுத்திறன் படைத்த மாணவர்களுக்கு பின்வரும் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

| வ. எண். | குறைப்பாட்டின் தன்மை | வழங்கப்படும் சலுகைகள் |
|---|---|---|
| 1. | கண் பார்வையற்றோர் | 1) தேர்வு எழுத சொல்வதை எழுதுபவர் (Scribe) நியமனம்.<br>2) தேர்வு எழுத கூடுதல் ஒரு மணி நேரம் |
| 2. | காது கேளாத மற்றும் வாய் பேச இயலாதோர். | 1) இருமொழிப் பாடங்களில் ஏதேனும் ஒரு மொழிப் பாடம் தேர்வு எழுத விலக்கு அளித்தல்.<br>2) தேர்வு எழுத கூடுதல் ஒரு மணி நேரம். |
| 3. | எதிர்பாராத விபத்துகளால் உடல் ஊனமுற்று தேர்வு எழுத இயலாதோர், பாரிச வாயு போன்ற நோயால் பாதிக்கப்பட்டோர் மற்றும் எதிர்பாராத விபத்தினால் கைமுறிவு ஏற்பட்டோர். | 1) தேர்வு எழுத சொல்வதை எழுதுபவர் நியமனம்.<br>2) தேர்வு எழுத கூடுதல் ஒரு மணி நேரம். |
| 4. | மனநலம் குன்றியோர் | 1) இருமொழிப் பாடங்களில் ஏதேனும் ஒரு மொழிப் பாடம் தேர்வு எழுத விலக்கு அளித்தல்.<br>2) தேர்வு எழுத கூடுதல் ஒருமணி நேரம். |
| 5. | டிஸ்லெக்சியா குறைபாடு | 1) தேர்வு எழுத கூடுதல் ஒரு மணி நேரம்.<br>2) கால்குலேட்டர் பயன்படுத்த அனுமதி<br>3) கிளார்க் அட்டவணை பயன்படுத்த அனுமதி.<br>4) கேள்வித் தாளை படித்துக் காட்ட அல்லது சொல்வதை எழுத ஆசிரியரை நியமிக்க அனுமதி. (இரண்டில் ஏதெனும் ஒரு சலுகை அன்னாரின் கோரிக்கைப்படி).<br>5) ஏதெனும் ஒரு மொழிப் பாடம் எழுதுவதிலிருந்து தவிர்ப்பு வழங்குதல்<br>6) மொழி அல்லாத பிற பாடங்களை திருத்தும் போது எழுத்துப் பிழைக்கென மதிப்பெண் குறைக்காமல் பாடப் பொருளை மட்டும் கணக்கில் கொண்டு மதிப்பெண் அளித்தல்.<br>7) பள்ளியில் முறையாக பயின்றோ அல்லது பள்ளியில் முறையாக பயிலாமல் தனிப்பட்ட முறையில் ஆசிரியரிடம் சிறப்பு பயிற்சி பெற்று தனித் தேர்வராக பொதுத் தேர்வு எழுத அனுமதித்தல். |
| 6. | நரம்பியல் கோளாறு | டிஸ்லெக்சியா குறைபாடுகள் உள்ள தேர்வர்களுக்கு வழங்கிய சலுகைகளுடன் கணினி மற்றும் வரைபடம் பயன்படுத்த அனுமதி. |

**மார்ச் 2010 பொதுத் தேர்வுகளுக்கு மேற்படி சலுகைகளை அனுபவித்த மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை விவரம்**

| தேர்வுகள் | கண்பார்வை குறைபாடுள்ளோர் | காதுகேளாதோர் மற்றும் வாய்பேச இயலாதோர் | இதர மாற்று திறனாளிகள் |
|---|---|---|---|
| மேல்நிலை | 210 | 77 | 131 |
| இடைநிலை | 413 | 543 | 246 |
| மெட்ரிகுலேசன் மற்றும் ஆங்கிலோ - இந்தியன் | 3 | 19 | 68 |
| **மொத்தம்** | **626** | **639** | **445** |

**தங்கம் தென்னரசு**
பள்ளிக்கல்வி அமைச்சர்